27ம் ஆண்டில்...
27 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN

# உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Cnaada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

Issue: 1466

Friday May 10, 2024

## அட்சய திருதியை 2024 ஐ முன்னிட்டு மிசிசாகா மற்றும் பிரம்ரன் மாநகரங்களில் உள்ள தாமோர் நகைமாளிகையின் இரண்டு கிளைகளிலும் சலுகை விலைகளில் தங்க நகை ஆபரணங்களை வாங்கிக் கொள்ள விரையுங்கள்




HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
HAPPY MOTHERS DAY
mom
12TH MAY 2024, SUNDAY
Lunch and Dinner Buffet
FROM 10.00AM TO 10.00PM
ONLY AT SCARBOROUGH
SPECIAL MENU
Plain Dosa | Poori | Tiffin Sambhar | Potato Masala
Coconut Chutney | Special Chutney | Medhu Vada
Ghee Pongal | Rava Kichadi | Chef Special Biryani
Tandoori Curry | Bisibelabath | Bagalabath (Curd Rice)
Mixed Vegetable Sambhar | Vegetable Kootu | Special Kulambu
Rasam | Special Rice/Noodles | Plain Rice | Vegetable Poriyal |
Special Poriyal | Appalam | Curd Pickle | More milagai
Pachadi | Onion Pakora
Order Online: www.saravanabhavan.ca
SARAVANAABHAVANCANADA
SCARBOROUGH: 416 293 7755
MISSISSAUGA: 905 290 0769
DELTA B.C: 778 578 7575
SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION. 1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2
MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9
DELTA: 8701 - 120TH STREET, DELTA, BC, V4C 6R4

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

Member of National Ethnic Press and Media Council of Canada
27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் பேசும் உலகில் எதிர்க்கும் கதிர் வாரச் செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1466 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 10, 2024

# "ஆளும் லிபரல் அரசாங்கமும், பிரதமரும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவை வழங்கிக்கொண்டிருப்பதை தமிழர்கள் மறக்கமாட்டார்கள்"

## ஒட்டாவாவில் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவிப்பு



"எமது ஆளும் லிபரல் அரசாங்கமும் அதன் பிரதமர் அவர்களும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கிக்கொண்டிருப்பதை கனடிய தமிழர் எவரும் மறந்து விடமாட்டார்கள். எனவே எமது பிரதமர் அவர்களுக்கு கனடா வாழ் தமிழ் மக்கள் எந்த இடத்திலும் தொடர்ச்சியாக நன்றி தெரிவித்து வருகின்றார்கள். எனவே நாம் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி குற்றமிழைத்த இலங்கை அரசிற்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவோ அன்றி அவர்களிடமிருந்து ஒரு பொறுப்பு கூறும் அறிக்கையோ பெற்றுவிட விடா முயற்சியோடு செயற்பட வேண்டும்"

இவ்வாறு கடந்த 7ம் திகதி செவ்வாய்க்கிழமை கனடா ஒட்டாவா பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்தார். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

# 'தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம்' மே 1 தொடக்கம் 18 வரை கடைப்பிடிக்கப்படுவதை சட்டமூலம்-104 உறுதிசெய்கிறது

ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் மற்றும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஒத்துடைப்புடன் எமது மாகாண அரசின் உறுப்பினரும் மாகாண போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்களின் முயற்சியினால் மேற்படி சட்ட மூலம் ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அனைத்துக் கட்சிகளும் இதற்க ஆதரவு வழங்கியிருந்தன.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)







தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

Uthayan International Awards Festival – 2024
உதயன் சர்வதேச விருது விழா-2024
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
மண்டபம்:- The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM

# "அரசியல்வாதிகள் எமது மண்ணை காப்பாற்றவாவது பாராளுமன்றத்தில் வாய் திறந்து பேச வேண்டும்" மண்ணுக்காக வாய் திறவுங்கள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

## முல்லை சிங்கள பூமியாக மாறுகிறது




தமிழ் அரசியல்வாதிகள் எமது மண்ணை காப்பாற்றவாவது பாராளுமன்றத்தில் வாய் திறந்து பேச வேண்டும் என முல்லைத்தீவு தீவு மாதர் சங்க தலைவி சு. கங்கம்மா வேண்டுகோள் விடுத்தார்.

08-05-2024 புதன்கிழமை வட மாகாண ஆளுநர் செயலாளருக்கு முன்னால் இடம் பெற்ற போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டம் மகாவலி என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் சிங்களவர்களுக்கு தாரை வார்த்து கொடுக்கப்படுகிறது.

கொக்கதொடுவாயில் 3 கிராமங்கள் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட நிலையில் குறித்த பிரதேசம் பரந்துபட்ட வயல் காணிகளைக் கொண்ட பிரதேசம் 1984 ஆம் ஆண்டு சிங்கள அரசாங்கம் திட்டம் திட்டமிட்ட முறையில் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை விடுதலைப் புலிகளை அழித்துவிட்டு மூன்று நாட்களில் உங்களை மீண்டும் குறித்த பகுதியில் அனுமதிக்கிறோம் என்றனர்.

ஆனால் முப்பது வருடங்கள் குறித்த பகுதிக்கு செல்வதற்காக நாம் காத்திருந்த நிலையில் விடுவிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்த நிலையில் எமது காணிகள் எமக்கு ஒப்படைக்கப்படவில்லை.

குறித்த பகுதி விவசாய காணிகளைக் கொண்டதாக காணப்படும் நிலையில் எமது மக்கள் அங்கு விவசாயத்தில் ஈடுபடுவதற்கு இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

அங்கு வாழ்ந்த மக்களுக்கு மீன்பிடி என்றால் என்னவென தெரியாத நிலையிலும் வேறு வழியின்றி சிறு மீன்பிடியை நம்பியே தற்போது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தும் துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாது ஆமையன் குளத்தில் மூன்று ஏக்கர் காணி தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் சம்பத் நுகர நன்றாக திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களான தண்ணி முறிப்பு மதுரமடு மேல் மானாவாரி காணிகளையும் சிங்கள மக்களுக்கு பிடித்துக் கொடுத்துவிட்டனர்.

சிங்கள அரசாங்கம் மனசாட்சி இல்லாத ஒரு அரசாங்கம் சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் காணிகளை பிடித்து கொடுக்க முடியும் என்றால் ஒரு பகுதியை ஏனும் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற மனோநிலை வர வில்லை.

ஆகவே தமிழ அரசியல்வாதிகள் இனியாவது உங்கள் வாய்களை பாராளுமன்றத்தில் திறவுங்கள் உள்ளத்தை வைங்கள பூமியாக மாற்றுவதை தடுத்து நிறுத்துங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# "சிங்கள ஜனநாயகத்தை தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை உலகிற்கு தெரிவிப்பதற்கு தேர்தலை பகிஷ்கரிப்பது ஒரு சிறந்த முடிவாகும்"

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் தெரிவிப்பு



சிங்கள ஜனநாயகத்தை தமிழர்கள் ஏற்கவில்லை என்பதை உலகிற்கு தெரிவிப்பதற்கு தேர்தலை பகிஷ்கரிப்பது ஒரு சிறந்த முடிவாகும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் புதன்கிழமை 8ம் திகதி ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே சங்க செயலாளர் கோ. ராஜ்குமார் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "சிங்கள ஜனநாயகத்தை தமிழர்கள் ஏற்க வில்லை என்பதை உலகிற்கு தெரிவிப்பதற்கு தேர்தலை பகிஷ்கரிப்பது ஒரு சிறந்த முடிவாகும்.

இலங்கையின் ஒற்றை ஆட்சியை ஆதரிக்கின்ற நபர்களை தவிர்த்து, தமிழ் இறையாண்மைக்குரிய பொது வாக்கெடுப்புக்குரிய ஒருவருக்காக அனைவரும் ஒன்றிணைந்து அறிவித்தால் இவ்விடயம் சாதகமாக பரிசீலிப்பது தமிழ் மக்களுக்கும் பிரயோசனமாக இருக்கும்.

மேலும் மே 18 தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக நினைவேந்துவதற்கு இமாலய துரோகிகளுக்கு உரிமை இல்லை.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் எமது தொடர் போராட்டமானது வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக, 2635 ஆவது நாளாக தொடர்கிறது.

முழு இறையாண்மையுடன் ஒரு ஜனநாயக தமிழ் தேசத்தில் தமிழ் குழந்தைகளும், பெற்றோர்களும் சுதந்திரமாக வாழக்கூடிய எதிர்காலத்திற்காக எமது துணிச்சலான உள்ளங்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். இது தான் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவு தினமாகும்.

உலக தமிழ் பேரவை, கனடியன் தமிழ் காங்கிரஸ், எலியாஸ் ஜெயராஜா மற்றும் அவரது மனைவி சாந்தி ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்து கண்டியில் உள்ள புத்த பிக்குகளின் கால்களைத் தொட்டு வீழ்ந்து கும்பிட்ட பின்னர், தமிழ் இன படுகொலைகளுக்கு காரணமானவர்களிடம் ராஜபக்ச உட்பட பலருக்கு பணிந்து நடந்து கொண்டனர். இது தாயகத்தில் தமிழர்களை அவமரியாதை செய்யும் செயலாகும்.

மேலும், இந்த நபர்கள் ஒரு "இமாலய ஒப்பந்தத்தில்" கையெழுத்திட்டனர். இது சிங்கள இனவாத குழுக்களுடன் இணைந்து தமிழர் விரோத அமைப்புகளால் தயாரிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் நல்லிணக்கத்தில் கவனம் செலுத்துவதாக கூறி, தமிழர்களுக்கு எதிரான சிங்கள ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையை ஊக்குவிக்க உதவும் ஒப்பந்தமாகும்.

அமைதிக்கான வட கரோலினியன் என்ற தமிழ் அமைப்பின் ஊடாக எலியாஸ் ஜெயராஜா அவர்கள் மே 18 நிகழ்வை நடத்த திட்டமிட்டுள்ளதாக புலம்பெயர் தமிழ் தொடர்புகள் எமக்கு தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பல தமிழ் நபர்கள், "இமாலய ஒப்பந்தம்" பற்றி அறிந்திருக்க மாட்டார்கள் எனவும் பலர் எமக்கு கூறியிருந்தனர்.

இந்த தமிழ் உறவுகளை ஜெயராஜா அழைத்து தானும் இறந்த தமிழருக்காக கண்ணீர் காட்டுவதற்காக முள்ளிவாய்க்கால் தினத்தை எம் தொப்பில் கொடி உறவுகளுடன் நினைவு கூற முயல்கிறார்.

தமிழ் தாய்மார்களாகிய நாம், வன்னியிலிருந்து அமைதிக்கான வட கரோலினியர்களை, ஜெயராஜாவை முள்ளியவாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் பங்கு பெற அனுமதி கொடுக்க வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

"தமிழ் இமாலய துரோகிகள்" என்று குறிப்பிடப்படும் நபர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் செய்வது "இமாலய உடன்படிக்கைக்கு" ஆதரவைப் பெறுவதையும், வெளிநாட்டு அரசாங்கங்களுடன் பணம் பெறும் உத்திகளில் ஈடுபடுவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்.

வெளிநாட்டு அரசாங்கங்களிலிருந்து கணிசமான அளவு பணம் "இமாலயா ஒப்பந்தம்" என்று அழைக்கப்படும் குழுவுடன் இணைக்கப்பட்ட தனிநபர்களின் கணக்குகளுக்கு அனுப்பப்படுகின்றது என்று ஒரு நிலையான அவதானிப்பு உள்ளது. இந்த நிதிகள் "இமாலய ஒப்பந்தத்தை" ஊக்குவிக்கும் முயற்சிகளை ஆதரிப்பதாக கூறப்படுகிறது.

எனவே, தமிழர்களை கொன்று குவித்த ராஜபக்சக்களை ஆதரிதக்கும் இத்தீவிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழர்கள், இப்போது இனப்படு கொலைக்கான நீதிக்கும் தமிழ் அரசியல் இறையாண்மைக்கும் இடையூறு விளைவிக்கின்றனர்.

இவர்களும் இவர்களின் அமைப்புகளுக்கும் முள்ளியவாய்க்கால் நினைவு நாளை நினைவேந்த எந்த தார்மீக அதிகாரமும் இல்லை.

"இமாலய துரோகிகள்" என்று நாம் குறிப்பிடுபவர்களை ஒதுக்கி வைத்து மே 18 நினைவு தினத்தை நடத்தத் திட்டமிடுமாறு தமிழ் அமைப்புகளை நாங்கள் தாழ்மையுடன் வேண்டுகிறோம்" என தெரிவித்துள்ளார்.

உங்கள் வாக்கு முக்கியமான விஷயம்

**உங்கள் வாக்கை எப்படி செலுத்துவது எனத் திட்டமிடுங்கள்.**
மே 24-25 தேதிகளில் City Hall இல் முன்கூட்டியேயும், மற்றும் ஜூன் 1 -2 தேதிகளில் Mississauga வின் பல அமைவிடங்களிலும் உங்கள் வாக்கினைச் செலுத்துங்கள்.

தேர்தல் தேதியாகிய ஜூன் 10 அன்று நீங்கள் வெளியூரில் இருக்க நேர்ந்தால் பதிலி ஒருவர் மூலம் உங்கள் வாக்கைச் செலுத்துங்கள்

அமைவிடம் பற்றிய எங்கள் கருவியை உபயோகித்து எங்கு நீங்கள் வாக்களிக்கலாம் எனக் கண்டுபிடியுங்கள். வருகை புரியவும்
**mississauga.ca/vote**

vote votez
MISSISSAUGA

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

## 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்' சட்ட விரோதமானது என்கிறது இலங்கை அரசு, ஆனால் நாடு கடந்த அரசாங்கத்தின் தேர்தல் ஆணையம், நியாயமான தேர்தல் வேட்பு மனுக்களை நியாயமின்றி நிராகரித்துள்ளது...

ஜனநாயக விழுமியங்களை மீறி நடத்தப்பெற்ற தேர்தலில் தவறான வழிகளில் உறுப்பினர் பதவிகளைப் 'தட்டிக்' கொண்டவர்கள் அமைச்சரவை என்னும் அரியாசனத்தில் அமர்வதற்கு காத்திருக்கின்றார்கள்'.

'நாடு கடந்த அரசாங்கம் என்பது ஒரு அரசியல் கருத்தியல். பல்வேறு காரணங்களால் தமது பூர்விக வாழ்விடங்களை விட்ட விரட்டப்பட்டோ அன்றி நீங்கிச் சென்றோ. இன்னொரு தேசத்தில் அல்லது பிரதேசத்தில் வாழ்க்கையையும் தங்கள் இதர மொழி மற்றும் பண்பாடு தொடர்பான நடவடிக்கைகளையும் தொடரும் ஒரு தேசிய இனம் தனது புதிய வதிவிடத்தில் தமது தாயகம் சார்ந்த 'நாடு கடந்த அரசாங்கம்' ஒன்றை நிறுவி தங்கள் தாயகம் நோக்கிய அரசியல் செயல்பாடுகளைத் தொடரலாம் என்பதன் ஆரம்பப் புள்ளி என்பதையே, உலகில் அடக்குமுறைகளை அனுபவித்த எம்போன்ற வேறு இனம் சார்ந்த அமைப்புக்களும் தெரிவித்துள்ளன.

இந்த வகையில் 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்' என்னும் கட்டமைப்பு 2009ம் ஆண்டிற்குப் பின்னர் தோற்றம் பெற்றது.

ஆரம்பத்தில் பல பிரிவுகளாக நின்ற எமது சமூகம் ஒன்றுபட்டு இயங்க முடியாமல் பல தோல்விகளைச் சந்தித்து கொண்டது. எனினும் தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சியின் காரணமாக இயங்காமல் போய்விடுமோ என்று கருதப்பட்ட எமது 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் கட்டமைப்பு தொடர்ச்சியாக செயற்பட்டு வந்தது

இவ்வாறான நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் பயணத்தின் நான்காவது அரசவைக்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தல் பற்றிய அறிவிப்புக்கள் வெளிவந்து தேர்தலுக்கான திகதி தீர்மானிக்கப்பெற்று வேட்பு மனுக்களை சமர்ப்பிக்கும் திகதிகளும் அறிவிக்கப்பெற்றன.

இதேவேளை 2009ம் ஆண்டு தொடக்கம் இந்த கருத்தியலில் தீவிரப் பற்றுக்கொண்ட பலர் தொடர்ச்சியாக இந்த கட்டமைப்பின் உலகளாவிய செயற்பாடுகளுக்கு தங்கள் ஆதரவை வழங்கி வந்தனர்.

ஆனால் கடந்த மே மாதம் 5ம் திகதி கனடாவில் கனடிய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பெற்ற தேர்தலில் போட்டியிடும் வகையில் தங்கள் வேட்பு மனுக்களை சமர்ப்பித்த பதினைந்துக்கும் அதிகமான வேட்பாளர்களின் மனுக்கள் நியாயமான காரணங்கள் எதுவும் காட்டப்படாமல் கனடிய தேர்தல் ஆணையத்தால் நிராகரிக்கப்பட்டன. ஆனால் அவ்வாறு நிராகரிக்கப்பட்டவர்களில் பலர் கடந்த பதினான்கு ஆண்டுகளுக்கு

மேலாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற கருப்பொருள் மீதும் அதன் கட்டமைப்பிலும் பூரண நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டு இயங்கிவந்த பலரின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் இவ்வாறாக வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் இந்த தடவை இடம்பெற்ற அநீதியான முறையில் நடத்தப்பட்டதைப் போன்று இல்லை என்பதே கனடாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் விசுவாசிகள் மத்தியில் இடம்பெறும் பேசு பொருளாக உள்ளதும் கவனிக்கப்பட வேண்டியதாகவும்.

இவ்வாரக் கதிரோட்டத்தின்' முடிவாக நாம் இதைத் தான் அனைவருக்கும் எடுத்துச் செல்ல விரும்புகின்றோம்.

கனடாவில் இயங்கிய நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அங்கத்தவர்களின் ஒன்று பட்ட பயணம் இடைக்கிடை தகர்த்தெறியப்படும் வகையில் ஏன் தளர்வு ஏற்பட்டது என்பது எம் போன்றவர் அறிந்திருக்க வேண்டியது முக்கியமான விடயமாகும்.

ஏவ்வாறாயினும் அநீதி விளைவிக்கப்பெற்ற நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னைய தீவிர செயற்பாட்டாளர்கள் மீண்டும் தங்கள் தங்கள் பதவிகளில் வந்து இணைந்து கொள்ளும் வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கமானது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒன்று கூடி அடுத்த பிரதமரையும் அமைச்சரையும் தேர்ந்தெடுக்கவுள்ள நிகழ்வை சற்று நிறுத்தி வைத்த பின்னர் எமது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செய்பாடுகளை வழமை போல கனடாவில் நடத்திச் செல்லும் வகையில் அனைத்து தரப்பினரும் வெளிப்படைத் தன்மையோடு செயற்பட முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளை சம்பந்தப்பட்டவர்களின் முன்பாக சமர்ப்பிக்கின்றோம்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

**லண்டன், ஒன்டாரியோ கனடாவில் லாபகரமான வணிக இடம் உங்களுக்காகக் காத்திருக்கிறது!**

**(Profitable Commercial Property Awaits You in Canada!)**
இடம்: லண்டன், ஒன்டாரியோ - பரபரப்பான டவுன்டவுன் மையப்பகுதி
**(London, Ontario - Bustling Downtown Core)**

பயன்பாடுகள் (நகர ஒப்புதல் பெற்ற மண்டல வரையறை): **(Zoning & Usages):** வழிபாட்டுத் தலங்கள் **(Temples, Places of Worship)**, மருத்துவமனைகள் **(Doctor's Offices)**, உணவகங்கள் **(Restaurants)**, குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் **(Daycare Centers)**, பள்ளிகள் **(Schools)**, விழா அரங்கங்கள் **(Party Halls)**, இதற்கு மேற்பட்டவை **(and much more!)**

சிறப்பம்சங்கள்: **(Highlights)**
பரபரப்பான இடம் - பொது போக்குவரத்து சில விநாடிகள் தூரத்தில் உள்ளது **(Busy Location - Public Transportation Seconds Away)**
வழிபாட்டுத் தலத்திற்கான அனுமதி பெற்ற வரைபடங்கள் கிடைக்கும் **(City-Approved Permits and Drawings Available for a Place of Worship)**
இரண்டு புதுப்பிக்கப்பட்ட கழிப்பறைகள் **(2 Fully Renovated Washrooms)**
**3100** சதுர அடி பரந்த இடம் - பெரிய திறந்தவெளி கூடத்துடன் **(3100 SQF Space with Large Open Gathering Area)**. விலை: **$329,000 (Negotiable)**

இந்த வாய்ப்பு விரைவில் கைவிட்டுப் போகலாம்! **(This Opportunity Won't Last Long! Serious Inquiries Only.)**

தொடர்புக்கு: **(Contact:): Sathyan at 226-786-2008**

**மணமகன் தேவை**

**Canada** தேசத்தில் **British Columbia** மாகாணத்தில் உள்ள **Vancouver** நகரில் வசிக்கும் தமிழ் ரோமன் கத்தோலிக்க பெற்றோர், நற்பண்புகள் கொண்டவரும். நன்கு கல்வி கற்றவரும், அழகுடையவருமான தமது மகளுக்கு மணமகன் ஒருவரைத் தேடுகின்றார்கள்.

மணமகள் **Canadian Professional Accountant (CPA)** பணியாற்றுகின்றார். மணமகன் 35 வயதுக்கு குறைந்தவராகவும். நற்பண்புகள் கொண்டவரும். நன்கு கல்வி கற்றவருமாக இருக்க வேண்டும். அத்துடன் வைத்தியத்துறை. கணக்கியல் துறை. சட்டத்துறை கொம்பியூட்டர் துறை ஆகிய துறைகளில் ஒன்றில் தொழில் செய்பவராக இருக்க வேண்டும். வர்த்தகத்துறையில் உள்ளவராகவும் இருக்கலாம். மேலும் மணமகன் அன்பானவராகவும் இருத்தல் அவசியம்.அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும். தொடர்புகளுக்கு:- **vnadesan.1@gmail.com** என்னும் மின்னஞ்சலில் விபரங்களை அனுப்பவும்.

**மணமகன் தேவை**

**Canada** தேசத்தில் **British Columbia** மாகாணத்தில் உள்ள **Vancouver** நகரில் வசிக்கும் தமிழ் ரோமன் கத்தோலிக்க பெற்றோர், நற்பண்புகள் கொண்டவரும், நன்கு கல்வி கற்றவரும், அழகுடையவருமான தமது மகளுக்கு மணமகன் ஒருவரைத் தேடுகின்றார்கள்.

மணமகள் 35 வயதுடையவர். **Physio Therapy Assistant** பதவியில் **General Hospital Surrey B.C** வைத்தியசாலையில் பணியாற்றுகின்றார். மணமகன் நற்பண்புகள் கொண்டவரும். நன்கு கல்வி கற்றவருமாக இருக்க வேண்டும். அத்துடன் வைத்தியத்துறை. கணக்கியல் துறை. சட்டத்துறை ஆகிய துறைகளில் ஒன்றில் தொழில் செய்பவராக இருக்க வேண்டும். வர்த்தகத்துறையில் உள்ளவராகவும் இருக்கலாம். மேலும் மணமகன் அன்பானவராகவும் இருத்தல் அவசியம். அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும். தொடர்புகளுக்கு: **vnadesan.1@gmail.com** என்னும் மின்னஞ்சலில் விபரங்களை அனுப்பவும்.

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**TELEMARKETERS WANTED**

தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய Telemarketers உடனடியாகத் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416-754 9492



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து பதவியை தூக்கி எறிந்த ஈழவேந்தன் அவர்களுக்கு அஞ்சலி!



1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துத் தன் மத்திய வங்கி உயர் பணியைத் தூக்கியெறிந்த தன்மானத் தமிழன் மா.க. ஈழவேந்தன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



# கிளிநொச்சி டிப்போ சந்தியில் இராணுவத்தினர் விளையாட்டு பூங்கா ஒன்றை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்ப்பு



கிளிநொச்சி டிப்போ சந்தியில் யுத்த நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டு இடத்தில் சட்ட விரோதமாக இராணுவத்தினர் விளையாட்டு பூங்கா ஒன்றை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ் நேரில் சென்று பார்வையிட்டதோடு இவ்விடத்தில் தொடர்ந்து இராணுவத்தினர் ஆதிக்கம் செலுத்துவது தொடர்ந்தால் மக்களே ஒருமித்த அளவிலான போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

பூநகரி பொன்னாவெளி பகுதியில் வளங்கள் சூறையாடப்படுகின்றது. உருத்திரபுரம் உருத்திரபுரீச்வரர் ஆலயம் ஆக்கிரமிக்க முயற்சிக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் அனுமதியில்லாது இராணுவம் மேற்கொள்ளும் கட்டுமானத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் கரைச்சி பிரதேச சபைக்குச் சென்று அங்கு கரைச்சி பிரதேச செயலாளரிடம் இச்சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# நெடுந்தீவில் தடையற்ற மின்சார வழங்கல் உறுதி செய்யப்பட வேண்டும்

## துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு!

நெடுந்தீவு பிரதேசத்தில் தடையற்ற 24 மணி நேர மின்சார வழங்கல் உறுதி செய்யப்பட வேண்டும் என துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் பாரிய மின்பிறப்பாக்கிகள் மூலமாக நெடுந்தீவு மக்களுக்கு தடையற்ற பின்சாரம் இலங்கை பின்சார சபையின் மூலம் நீண்டகாலமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த சில நாள்களாக நெடுந்தீவு பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டதால் அப்பகுதி மக்கள் குறிப்பாக தற்போதைய அதி வெப்பமான சூழ்நிலையில் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க நேரிட்டிருந்தது.

இதற்கு இயந்திரங்களில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறுகளே காரணம். என துறைசார் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விடயம் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது.

இதையடுத்து துறைசார் தரப்பினருடன் குறித்த தடங்கல் தொடர்பில் தொலைபேசியில் கேட்டறிந்துகொண்ட அமைச்சர் சீரமைக்கும் பணிகளை மிக விரைவாக முன்னேடுத்து தடையற்ற மின்சார வழங்கலை உறுதி செய்யுமாறு பணித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது குறித்த மின் பிறப்பாக்கிகள் சீர் செய்யப்பட்டு மின்சார சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் - தற்போது சாதாரண தர பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டில் அதி வெப்ப நிலையும் காணப்படுகின்றது.



இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படும் ஏது நிலைகள் அதிகளவில் உள்ளன. அதுமட்டுமல்லாது மக்களின் பல்வேறு வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளும் பிரச்சினைகளை ச்ந்தில்க நேரிடும்.

இதேவேளை நாடு முழுவது இருளில் மூழ்கிய சந்தர்ப்பங்களில் கூட இப்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது கிடையாது. அந்தவகையில் எதுவித தடைகளும் ஏற்படாது வகையில் சேவையை வழங்குவது துறைசார் தரப்பினரது கடமையாகும்.

இதேநேரம் இப்பகுதியில் காற்றலை மின் உற்பத்திக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை நிறைவுற்றதும் தடையற்ற மின்சாரத்துடன் குறைந்த செலவிலும் இப்பகுதி மக்கள்.மின்சார சேவையை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "வடக்கு மாகாண அபிவிருத்திக்கான ஒத்துழைப்புகளை தொடர்ந்து வழங்கும்"

## இலங்கைக்கான நோர்வே தூதுவர், வடக்கு ஆளுநரிடம் தெரிவிப்பு



இலங்கைக்கான நோர்வே தூதுவர் May-Elin Stener, வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களை 05-05-2024 அன்று சந்தித்து கலந்துரையாடினார். வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்ற நடவடிக்கையின் முன்னேற்றங்கள், காணி விடுவிப்பு, கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, கல்வி, இயற்கை சக்தி வளங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், சுற்றுலா வழிகாட்டிகள் போதிய எண்ணிக்கையில் இல்லை எனவும், தங்குமிட வசதிகள் போதுமான அளவு இல்லை எனவும் குறிப்பிட்ட கௌரவ ஆளுநர், சுற்றுலாத் துறையை மேம்படுத்த முதலீடுகள் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

கற்றல் செயற்பாடுகள் மற்றும் தொழிற்கல்வியை பெற முடியாது போகும் இளைஞர், யுவதிகள் தொடர்பில் மாற்று வழிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார்.

விடயங்களை கேட்டறிந்துக் கொண்ட இலங்கைக்கான நோர்வே தூதுவர் May-Elin Stener, வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ச்சியாக வழங்கத் தயார் எனவும், ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

**ஊடகச் செய்தி** — மே 7, 2024

# கனடாவில் சில தொகுதிகளில் தேர்தல் மே 12ம் திகதி நடைபெறும் — தலைமைத்தேர்தல் ஆணையாளர்

அன்பார்ந்த கனடா வாழ் தமிழீழ மக்களே!

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைமைத் தேர்தல் ஆணையாளரான ரஞ்சன் மனோரஞ்சன் ஆகிய நானும், கனடாத் தேர்தல் ஆணையாளர் சிவபாலன் பாலசுந்தரம் மற்றும் நாடுகடந் தமிழீழ அரசாங்க முறையீட்டு ஆணைக்குழுவின் தலைவர் அனான்பொன்னம்பலம் ஆகிய மூவரும் 06-05-2024 அன்று அவசர சந்திப்பினுடாக பின்வரும் தீர்மானத்தை இணைந்து எடுத்துள்ளோம்.

தேர்தல் முறையீட்டு ஆணைக் குழுவின் முடிவே நாடுகடந்த தமிழீழ அரசாங்கதின் தேர்தல் ஆணையகத்தின் இறுதி முடிவாகும். அதாவது, கனடா தேர்தல் ஆணையகத்தினால் நிராகரிக்கப்பட்ட பத்து வேட்பளார்களின் விண்ணப்பங்களை மீளப்பெற்று, அவர்கள் பிரதிநித்துவப் படுத்தும் தொகுதிகளில் தேர்தல்கள் மே 12,2024 இல் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

இந்த தேர்தலில் உங்களது வாக்குகளை தவறாது செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேர்தல் முறையீட்டு சுயாதீன ஆணைக்குழுவின் அறிக்கை: https://www.einpresswire.com/article/708745446/

நன்றி.

ரஞ்சன் மனோரஞ்சன்
தலமைத்தேர்தல் ஆணையாளர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

# "தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம்" மே 1 தொடக்கம் 18 வரை கடைப்பிடிக்கப்படுவதை சட்டமூலம் – 104 உறுதிசெய்கிறது

கனடிய செய்திகள்
Canadian News



ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் மற்றும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஒத்துடைப்புடன் எமது மாகாண அரசின் உறுப்பினரும் மாகாண போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்களின் முயற்சியினால் மேற்படி சட்ட மூலம் ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அனைத்துக் கட்சிகளும் இதற்க ஆதரவு வழங்கியிருந்தன.

இந்த ஆண்டுடன், அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் அறிமுகப்படுத்திய தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டத்துக்கான "சட்டமூலம்-104" வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைகிறது. ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 18 ஆம் தேதியில் முடிவடையுமாறு ஏழு நாட்களை உள்ளடக்கியதாக "தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம்" (மே 12-18) கடைப்பிடிக்கப்படுவதை சட்டமூலம்-104 உறுதிசெய்கிறது.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பு நடத்தப்பட்டதென்பதைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கும் சர்வதேச நாடுகளில் முதன்மையானதாக கனடா நாட்டின்.

ஒன்றாறியோ மாகாணம் திகழ்கிறது. இச்சட்ட நிறைவேற்றமானது ஒன்றாறியோவில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

15 ஆண்டுகளுக்கு முன்பு, மே 2009 இல், முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துகள் மறுக்கப்பட்டு, சட்டத்திற்கு புறம்பான கொலைகள், கற்பழிப்புகள், போர் தவிர்ப்பு வலயங்கள் தொடர்பான விதிமீறல்கள் மற்றும் மருத்துவமனைகள் மீதான இலக்கு வைக்கப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு தமிழ் மக்கள் திட்டமிடப்பட்டு அழிக்கப்படட்னர்.

குறுகிய காலப்பகுதியில் முள்ளிவாய்க்காலில் இழந்த 1,46,679 க்கும் அதிகமான உயிர்களை எங்களால் மீட்டெடுக்க முடியாது என்றாலும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் வலியையும் அவர்களது குடும்பம் மற்றும் நண்பர்களின் இழப்பையும் ஒப்புக்கொள்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் சிறு மாற்றத்தையேனும் ஏற்படுத்த முடியும்.

ஒன்றாறியோவிலுள்ள பின்வரும் கல்விச் சபைகள் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை அங்கீகரித்துள்ளன:

Toronto District School Board (TDSB)
Toronto Catholic District School Board (TCDSB)
York Region District School Board (YRDSB)
Peel District School Board (PDSB)
Durham District School Board (DDSB)



இந்த மாதம் முழுவதும், உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள், தலைமுறை தலைமுறையாக தங்கள் இனம் அனுபவித்த வேதனைகளையும் தமக்கு ஏற்பட்ட தாக்கங்கள் பற்றிய கதைகளையும் உணர்வுபூர்வமாகப் பகிர்ந்து கொள்வர். அதிலும் குறிப்பாக, ஒன்றாறியோவின் பல பகுதிகளிலுமுள்ள கல்விச் சபைகளில் கற்கும் மாணவர்கள் தமிழர்கள் எதிர்கொண்டுவரும் இன அழிப்புத் தொடர்பான விழிப்புணர்வு பற்றி அறிந்துகொள்வர். அதேவேளை, பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளை அணுகி இச்செயற்பாட்டினை ஊக்குவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

எனவே, இவ்வாரத்துக்கான செயற்பாடுகளை உற்றுநோக்கும்போது, தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம், தமிழ்ச் சமூகத்தின் காயங்களை ஆற்றும் செயல்முறையைத் தொடங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.








# மன்னாரில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 38 வது நினைவு தினம் அனுஷ்டிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News
மன்னார் நிருபர்

(06-05-2024)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 38 ஆவது நினைவு தினம் மன்னாரில் (06-05-2024) திங்கட்கிழமை மாலை அனுஷ்டிக்கப் பட்டுள்ளது.

குறித்த நினைவு அஞ்சலி நிகழ்வானது தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மறைந்த தலைவரின் திருவுருவப்படத்திற்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் மாலை மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.





இந்நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஈ.பி.ஈர்.எல்.எப். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் உற்பட பிரமுகர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு 600 மில்லியன் ரூபா நிதியை நன்கொடையாக வழங்க இந்திய அரசாங்கம் அனுமதி





மன்னார் பொது வைத்தியசாலைக்கு 600 மில்லியன் ரூபா நிதியை நன்கொடையாக வழங்க இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி கிடைத்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுக்கான கட்டிட நிர்மாண பணிகளுக்கும், மருத்துவ உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்குமாக இந்த 600 மில்லியன் ரூபா நன்கொடை பயன்படுத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ், மாகாண சபையால் திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் ஊடாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டது.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இந்திய அரசாங்கம் 600 மில்லியன் ரூபா நன்கொடையை வழங்குவதற்கான அனுமதியை அளித்துள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு இன்மையால் மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் முகமாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் – நடுக்குடாவில் தனியாருக்குச் சொந்தமான சுமார் 160 ஏக்கர் பனை மர காணிகள் அபகரிப்பு

## வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்கள்



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி நடுக்குடா பாவிலான்பாட்டன் குடியிருப்பு பகுதியில் தனியாருக்குச் சொந்தமான சுமார் 160 ஏக்கர் பனை மரங்களை கொண்ட காணிகள் சட்ட விரோதமான முறையில் இந்திய தனியார் கம்பெனி ஒன்றிற்கு கனிய மணல் அகழ்வுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து வரும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், குறித்த காணியில் உள்ள பல நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டு கனிய மணல் அகழ்வு இடம் பெற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது குறித்த காணிக்கான சுற்று வேலி அமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் குறித்த காணியின் உரிமையாளர்கள் அங்கு சென்ற நிலையில் பொலிஸார் கைது செய்வோம் என அச்சுறுத்துவதாகவும் அடாவடித்தனத்துடன் காணி அபகரிப்பு இடம் பெற்று வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.



தமது பூர்வீக காணிகளே அடாத்தாக பிடிக்கப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் குறித்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் போலீசார் எவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை.

இதனால் எமது சமூகமும் பாரிய அளவில் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர். பனை உற்பத்தியை நம்பி வாழ்ந்து வந்த நிலையில் தற்போது பனை மரங்கள் உள்ள காணி அபகரிக்கப்பட்டு பனை மரங்களும் வெட்டப்பட்டு வருகிறது.

தற்போது எமது வாழ்வாதாரத்திற்கான பனை மரங்களும் வெட்டப்பட்டுள்ளது. தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மணல் அகழ்வுக்காக குறித்த காணியை விற்பனை செய்துள்ள நிலையில் தற்போது எங்களை உள்ளே நுழைய விடாது காணிக்கு சுற்று வேலி அடைக்கப்பட்டு வருகின்றது.

எனவே உரிய உயர் அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு எமக்கு எமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த காணியை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.என கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# வருமானத்தில் மாத்திரம் குறியாக உள்ள மன்னார் நகரசபை – நாற்றமெடுக்கும் நகர் பகுதி! மக்கள் குற்றச்சாட்டு



09.05.2024

மன்னார் நகர சபை தொடர்ச்சியாக வருமானத்தை மட்டுமே மையமாக கொண்டு இயங்குவதுடன் நகரத்தை சுத்தப் படுத்துவது,நகரத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பிலோ அல்லது நகரசபைக்கு உற்பட்ட பின் தங்கிய கிராமங்களுக்கு வீதிகளை அமைப்பதிலோ அக்கறை செலுத்துவதில்லை என்பது நகர சபையின் அண்மைக்கால செயற்பாடுகளில் தெரிய வந்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பல இடங்களில் உரிய விதமாக குப்பைகள் அகற்றப்படாமல் ,வீதிகளில் கொட்ட பட்டுள்ளதாகவும் வீதியில் கொட்டப்பட்ட குப்பைகள் நகரசபையினால் அள்ளப்படாமையினால் சிலர் வேறு வழி இன்றி முறையற்ற விதமாக குப்பைகளை எறியூட்டுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மறுபுறம் பல கிராமங்களில் வீதிகள் இல்லை எனவும் பல கிராமங்களில் நகர சபையால் சிறிது காலத்துக்கு முன் அமைக்கப்பட்ட வீதிகள் காணாமல் போயுள்ளதாகவும் மறுபக்கம் பாழடைந்த நிலையில் மன்னார் மீன் சந்தை கட்டிடம்,பராமரிப்பு இன்றி மன்னார் பேருந்து நிலையம் காணப்படுவதாகவும் நகரசபையினால் இது தொடர்பில் எந்த ஒரு நடவடிக்கையும் சீராக இடம் பெறுவதில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனால் மன்னார் நகரசபை இவற்றில் கவனம் செலுத்தாமல் நகர சபைக்கு சொந்தமான காணிகளில் கடைத் தொகுதிகளை அமைத்து அவற்றை விற்று பணம் சம்பாதிப்பதில் குறியாக உள்ளதாகவும், முன்னதாகவே மன்னார் நகர சபையினால் விற்பனை செய்யப்பட கடை தொகுதிகள் தொடர்பில் பல ஊழல் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்ற நிலையில் தொடர்ச்சியாக கடைகளை கட்டுவதிலேயே நகரசபை கவனம் செலுத்தி வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



ஏற்கனவே மன்னார் நகர சபையின் கீழ் கட்டப்பட்ட கடைகள் பராமரிப்பு இன்றி காணப்படுவதுடன் சில கடைகள் பூரணப் படுத்தப்பட்டும் விற்பனை செய்யப்படாமல் காணப்படுகின்ற நிலையில் கடந்த வாரம் மீண்டும் ஒரு கடைத்தொகுதி கட்டுமானத்திற்கு மன்னார் நகரசபை அடிக்கல் வைத்துள்ளது.

மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பல நிறைவேறாமல் காணப்படுகின்ற நிலையில் குறிப்பாக நகர சபைக்கு சொந்தமான இடங்களில் ஒழுங்கான குடிநீர் வசதி அல்லது தூய்மையான மலசல கூட வசதி இல்லாத நிலையில், ஒழுங்கான சிறுவர் பூங்கா, இல்லாத நிலையில் நகரசபைக்கு கிடைக்கும் வருமானகளில் அதிக அளவு தொகையை கடைத்தொகுதி கட்டுமானங்களுக்கு நகரசபை செலவு செய்து வருகிறது.

நகர சபை எல்லைக்குள் முன்னிலைப்படுத்தி செய்ய வேண்டிய பல வேலைகள் காணப்படுகின்ற நிலையில் நகரசபையின் பணம் சேகரிக்கும் குறிக்கோள் தொடர்பில் மக்கள் பல்வேறு முறைப்பாடுகளை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஆணையாளர் இது தொடர்பில் அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை. எனவே மன்னார் நகரசபை மக்களிடம் இருந்து வரிகளை பெறுவதிலும் கடைத்தொகுதிகள் கட்டி விற்பனை செய்யும் செயற்பாட்டிலும் காட்டும் ஆர்வத்தை மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துவது தொடர்பாக காட்ட வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாவிட்டால் மக்களை திரட்டி மன்னார் நகரசபை யை முற்றுகையிட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அதிக வெப்பத்தால் உடலில் பத்துக்கு எரிகாயம் ஏற்பட்டு யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

புு. கஜிந்தன்

அதிக வெப்பம் காரணமாக யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் பகுதியில் (08.05.2024 அன்று குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதன்போது அதே பகுதியைச் சேர்ந்த சிவஞானம் ஜெயக்குமார் (வயது 45) என்ற குடும்பபஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் 08-05-2024 அன்று மதியம் 1.45 மணியளவில் மதுபோதையில் இருந்ததை அவரது மகள் அவதானித்துள்ளார். பின்னர் 3.30 மணியளவில் அவர் வெயிலில், கீழே விழுந்து இருந்ததை அவதானித்துள்ளார். அருகில் சென்று பார்த்தவேளை அவர் உயிரிழந்து காணப்பட்டார்.

அவரது சடலம் மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அவர் அதிக வெப்பம் காரணமாக உடலில் பத்துக்கு மேற்பட்ட எரிகாயங்கள் ஏற்பட்டு உயிரிழந்ததாக பிரேத பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சடலம் 09-05-2024 அன்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# முல்லைத்தீவு மாவட்ட விசுவமடு மேட்டுப்பட்டித்தெரு கிராமத்தில் யானைகள் அட்டகாசம்!




முல்லைத்தீவு - விசுவமடு மேட்டுப்பட்டித்தெரு கிராமத்தில் விவசாயி ஒருவரின் பயிர்களை யானைகள் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் 08-05-2024 நள்ளிரவு வேளை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 03 யானைகள் தமது தோட்டத்தில் உட்புகுந்து அறுவடை செய்யும் தருவாயில் இருந்த வத்தகப்பழங்கள் மற்றும் 100ற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் என்பனவற்றை சேதமாக்கியுள்ளதென கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த கிராமத்தில் நீண்டகாலமாக யானைகள் தமது வாழ்வாதாரங்களை அழித்து வருவதாகவும் யானை வேலிகள் போடப்படும் வேலைகள் பூர்த்தியாகாத நிலையில் உள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தபட்ட அதிகாரிகள் விரைந்து தமது பிரச்சனைக்கு தீர்வு பெற்று தருமாறு விவசாயிகள் கேட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் வீதி பாதுகாப்பு விழிப்புணர்வு நடை பயணம்




வடமாகாண பிரதம செயலகம், வட மாகாண வீதி, போக்குவரத்து திணைக்களத்தின் எற்பாட்டில் வடமாகாணத்தில் அதிகரித்து வரும் வீதிப்போக்குவர விபத்துக்களை குறைக்கும் நோக்கில் வீதிபாதுகாப்பு விழிப்புணர்வு நடை பயணம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. வடமாகாண வீதி போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் சுஜீதா சிவதாஸ் தலைமையில் இது நடைபெற்றது.

இவ் நடை பயணமானது வேம்படிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி, அங்கு இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வீதியுடாக சென்று காங்கேசன்துறை வீதியூடாக சென்று, சத்திர சந்திவரை சென்று நிறைவடைந்தது.

பின்னர் வீதிபாதுகாப்பு நடைமுறைப்படி பின்பற்றல் தொடர்பிலும் வாகனசாரதிகளுக்கு விழிப்புணர்வு வழங்தப்பட்டதுடன், வாகன பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவ் விழிப்புணர்வு செயற்றிட்டத்தினை ஆரம்பித்து வைப்பதற்காக வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.





இதில் யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பிரணவநாதன், யாழ்ப்பாணம் பொஸில் நிலைய போக்குவரத்து பிரதான பரிதோதகர் பிரியந்த ஏக்கநாயக்க உள்ளிட்ட மோட்டார் திணைக்கள அலுவலகர்கள், பணிநிலை உத்தியோகத்தர்கள், பொஸில் மோட்டார் சைக்கிள் உத்தியோகத்தர்கள் சமூகவியாளர்கள், கல்வியாளர்கள்,சுகாதாரத்துறையினர் என பலரும் கலந்துகொண்டனர்.


# Thana Insurance Inc

THANA INSURANCE Inc.

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வெளிநாட்டவரின் பெரும் தொகை பணம் அடங்கிய பையை கையளித்த பருத்தித்துறை பேருந்து காப்பாளர் - குவியும் பாராட்டுக்கள்



வெளிநாட்டவர் ஒருவரின் பெரும் தொகை பணம் அடங்கிய பையை கையளித்த பருத்தித்துறை பேருந்து காப்பாளரரின் செயற்பாட்டினை பலரும் பாராட்டி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை சாலையில் காப்பாளராக கடமையாற்றும் டீ.பாலமயூரன் என்பவர் கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி சேவைக் கடமையில் ஈடுபட்டிருந்தார்.

குறித்த பேருந்தில் வெளிநாட்டவர் ஒருவரினால் தவறவிடப்பட்ட பாஸ்போர்ட், 120,840 இலங்கை ரூபாய் பணம் மற்றும் 300 யூரோ பணத்தினை 2024-05-07 அன்று சாலையில் ஒப்படைத்துள்ளார்.

அண்மை நாட்களில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு அதிக விலையில் உணவுகள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் செய்திகள் வெளியாகி நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பேருந்து காப்பாளரின் குறித்த செயல் பலராலும் பாராட்டப்படுகின்றது.

அத்துடன் இவர் 2021ம் ஆண்டு மற்றுமொரு பயணி ஒருவரால் தவற விடப்பட்ட இரண்டு லட்சத்து ஐம்பது ஓராயிரம் ரூபா பணம் மற்றும் எழுபதாயிரம் ரூபாய் பெறுமதியான போன் ஒன்றினையும் சாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.




# மக்கள் நடமாட்டம் பகல் குறைவு

## அம்பாறை மாவட்டத்தில் வெப்பம் அதிகரிப்பின் எதிரொலி



கடும் ஊஷ்ணம் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பொது மக்களின் நடமாட்டம் பகல் வேளையில் குறைவடைந்துள்ளதுடன் இரவு வேளை அதிகரித்து காணப்படுகின்றது.

அடிக்கடி ஏற்படும் காலநிலை மாற்றம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் சீரற்ற இயல்பு நிலையுடன் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சவளக்கடை, சம்மாந்துறை, மத்தியமுகாம், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உணவகங்கள், புடவைக்கடைகள், வீதியோர வியாபாரங்கள் போன்றவைகள் வழமை போன்று இயங்கிய போதிலும் மக்கள் நடமாட்டம் குறைவாகவே காணப்படுகிறது.

மேலும் அரச தனியார் போக்குவரத்து குறிப்பிட்ட தூரத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலும் மட்டுப்படுத்த மட்டில் இடம்பெற்றது. அதில் பயணம் செய்கின்ற பொதுமக்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதை அவதானிக்க முடிகிறது.இது தவிர அரச தனியார் வங்கிகள் திறந்துள்ளதுடன் மக்கள் வருகை குறைந்தளவில் காணப்படுவதடன் சில இடங்களில் ஆர்வத்துடன் பொருட்கொள்வனவில் ஈடுபட்டனர்.



கடந்த தினங்களுக்கு முன்னர் இம்மாவட்டத்தில் மழை திடிரென பெய்ததுடன் அதிகளவிலான பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டு பொருட் கொள்வனவில் ஈடுபட்டு வந்ததை அவதானிக்க முடிந்தது. சவளக்கடை மத்தியமுகாம் பகுதிகளில் உள்ள நீர் நிலைகளின் வான்கதவுகள் தற்போது திறக்கப் பட்டுள்ளதால் அதிகளவான நீர் வாய்க்கால் ஊடாக வெளியேறுகின்றது. இவ்வாறு வெளியேறும் நீரில அதிகளவான மக்கள் வெப்பத்தை தணிப்பதற்கு குடும்பம் குடும்பமாக சுற்றுலா சென்று நீராடுகின்றனர்.

மேலும் பிரதேச செயலகங்கள் நீதிமன்றங்கள் வங்கிகள் பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் பிரத்தியேக வகுப்புகள் உள்ளிட்ட அரச தனியார் நிறுவனங்கள் வழமை போன்று இயங்குகிறது. எனினும் கடும் வெப்பம் காரணமாக மக்கள் பகல் நேரத்தில் வெளியில் நடமாடுவதை தவிர்ப்பதுடன் இரவு வேளையில் அதிகளவில் நடமாடி வருகின்றனர்.அத்துடன் பெரிய நீலாவணை, ஓந்தாச்சிமடம், காரைதீவு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், அட்டப்பளம், சம்மாந்துறை மாவடிப்பள்ளி, சவளக்கடை, மத்தியமுகாம், உள்ளிட்ட முக்கிய இடங்களில் பிரதேசங்களில் மக்களின் நடமாட்டம் குறைவாக காணப்பட்டன.



அதேதோடு பொதுமக்கள் ஒன்றுகூடும் சில இடங்களில் முப்படையினர் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் கல்முனை பொது சந்தை உட்பட அதனை சூழ உள்ள பாதையோரங்களில் மரக்கறி வியாபாரம் களைகட்டி காணப்பட்டது. மேலும் வியாபார நிலையங்கள் சுப்பர் மார்க்கெட்டுகள் பாமசிகள் எரிபொருள் நிலையங்கள் வழமை போன்று திறக்கப்பட்டாலும் மக்கள் ஆர்வத்தடன் பொருட் கொள்வனவில் ஈடுபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் சில இடங்களில் பொதுமக்களின் வருகை இன்மையால் வியாபார நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# அன்னையரைப் போற்றுவோம்

## (நிலைமண்டில ஆசிரியப்பா)

அம்மா என்றால் அன்பெனும் அர்த்தமாம்
சும்மா சொன்னாரா சொர்க்கம் அவளென
கருவில் என்னைக் களிப்புடன் சுமந்து
உருவம் ஒன்றை மனதிலே கண்டாய்
பத்து மாதம் பாங்குறத் தாங்கியே
பத்தியம் இருந்தே பண்பொடு காத்தாய்
வெளிவரா என்னிடம் வேண்டி நின்றாய்
வெள்நிற உள்ளத்து விருப்பம் யாவையும்
அசைவுகள் கண்டே ஆனந்தம் கொண்டாய்
இசையைக் கேட்கவே ஏற்றவழி செய்தாய்
பாட்டுப் பாடியே பரவசம் கொண்டாய்
ஆட்டம் போட்டு அபிநயம் செய்தாய்
மாதமோ நெருங்கி வரவே மனதினில்
ஆதங்கம் அடைந்தாய் அச்சம் கொண்டே!
உருண்டு படுக்க உடல்தான் விரும்பியும்
நெருங்கும் நாட்களை எண்ணித் தவிர்த்தாய்
எனது உதைகள் இம்சை கொடுத்தும்
மனதிலே மட்டற்ற மகிழ்ச்சி பெற்றாய்
திங்களோர் மாற்றம் தேகத்தில் தெரியவே!
பங்கம் வராமல் பார்த்து நின்றாய்
உதிரம் கொட்டிட உனக்கும் வலிக்க
அதனைத் தாங்கியே ஆர்வமாய்ப் பெற்றாய்.
பாலகன் எனது பால்முகம் பார்த்து
பாலை எனக்குப் பாசமாய் ஊட்டினாய்
தந்தையின் கையில் என்னைத் தந்தே
சிந்தை மகிழச் சிரித்து நின்றாய்
என்னுள் துடிக்கும் இதயத்தை விடவும்
உன்னுள் இருக்கும் உறுப்புத் துடித்ததே!
எறும்பூ நெருங்கிடா இரவெலாம் பாதுகாத்தே
பொறுப்பொடு பொழுதெலாம் பிரியாமல் இருந்தாயே
தடுக்கிலே நானும் தவழும் போதிலே!
இடுக்கண் வராமல் இமைபோல் காத்தாய்
பல்லு முளைக்கையில் பரவசம் கொண்டே
பல்லுக் கொழுக்கட்டை பதமாய்ச் செய்தாய்
பால்நிலா வானில் பார்க்கச் சொல்லி
பாற்சோறு பரிவோடு பதமாய் ஊட்டினாய்
எட்டு மாதத்தில் எடுத்தடி வைக்கையில்
கட்டியொரு முத்தம் கன்னத்தில் தந்தாயே!
ஐந்து வயதில் அணைத்துச் சென்றுமே!
புந்தி புகட்டப் பள்ளியில் சேர்த்தாய்
சோதனைகள் பலவந்து சோதித்த போதுமே
சாதனைகள் பலவற்றைச் சாதிக்க வைத்தாய்
பள்ளிக்கு அனுப்பிப் படிப்பித்த உனக்கு
கொள்ளி வைக்கவும் கொடுப்பனை இல்லையே!
விண்ணுலகு நோக்கிநீ வரைந்திட்ட போதிலும்
மண்ணுலகில் உள்ளவரை மறப்பேனா நானுனையே!

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

# "ஆளும் லிபரல் அரசாங்கமும், பிரதமர் அவர்களும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவை வழங்கிக்கொண்டிருப்பதை தமிழர்கள் மறக்கமாட்டார்கள்"

## ஒட்டாவாவில் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவிப்பு















"எமது ஆளும் லிபரல் அரசாங்கமும் அதன் பிரதமர் அவர்களும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு அதற்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கிக்கொண்டிருப்பதை கனடிய தமிழர் எவரும் மறந்து விடமாட்டார்கள். எனவே எமது பிரதமர் அவர்களுக்கு கனடா வாழ் தமிழ் மக்கள் எந்த இடத்திலும் தொடர்ச்சியாக நன்றி தெரிவித்து வருகின்றார்கள். எனவே நாம் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி குற்றமிழைத்த இலங்கை அரசிற்கு உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவோ அன்றி அவர்களிடமிருந்து ஒரு பொறுப்பு கூறும் அறிக்கையோ பெற்றுவிட விடா முயற்சியோடு செயற்பட வேண்டும்"

இவ்வாறு கடந்த 7ம் திகதி செவ்வாய்க்கிழமை கனடா ஒட்டாவா பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களினாலும் கியுபெக் தமிழ்ச் சன சமூக நிலையத்தின் சார்பிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழினப் படுகொலை நினைவு தின வைபவத்தில் சிறப்புரையாற்றிய ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் மத்திய அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவித்தார்.

கியுபெக் தமிழ்ச் சனசமூக நிலையத்தின் உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் ரொறன்ரோ மாநகரிலிருந்தும் பல அன்பர்கள் கலந்து கொண்டனர்.

அன்றைய தினம் அனைத்து கட்சிகள் சார்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் அனைவரும் உருக்கத்தோடு அங்கு கலந்து கொண்டு இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளின் போது உயிரிழந்தவர்களுக்கு தங்கள் அஞ்சலிகளை செலுத்தினர்.

ஆளும் லிபரல் அரசாங்கம் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனைத்துக் கட்சிகளினது ஆதரவோடு அதை நிறைவேற்றி இரண்டாவது ஆண்டாகின்றது. இதையொட்டி இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கனடிய மத்திய அமைச்சர்களில் ஒருவரும் சர்வதேச வர்த்தக அபிவிருத்தி அமைச்சருமான மேரி இங் மற்றும் கனடிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் **Melanie Joly** ஆகியோரும் கலந்து கொண்டு இனப்படுகொலையின் போது கொல்லப்பட்டவர்களுக்கு தங்கள் அஞ்சலியைத் தெரிவித்தனர்.


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinіccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.


MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# பொது வேட்பாளரை எதிர்ப்பது யார்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



தமிழ்ப்பொது வேட்பாளர் தொடர்பான விடயம் தமிழ் மக்களைச் சென்றடைந்ததோ இல்லையோ, அதில் தமிழ் மக்கள் ஆர்வமாக இருக்கிறார்களோ இல்லையோ, ஒரு பகுதி பத்திரிகைகளும் பத்திரிகையில் எழுதுபவர்களும் யு டியூப்பர்களும் அரசியல்வாதிகளும் அதைக் கண்டு பதட்டம் அடைவது தெரிகிறது. அதற்கு எதிராக சில பத்திரிகைகள் ஆசிரியர் தலையங்கம் எழுதுகின்றன. சில பத்திரிகைகள் சூழ்ச்சி கோட்பாடுகளை உற்பத்தி செய்கின்றன. சில யு டியுப்பர்கள் வாய்க்கு வந்தபடி கதைக்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்னவென்றால், முதலாவதாக, தமிழ் பொது வேட்பாளர் விடயம் குறிப்பிட்ட ஒரு பகுதி அரசியல்வாதிகள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய ஊடகங்கள் யூடியூப்பர்கள் மத்தியிலும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்களுக்கு கிடைக்க வேண்டிய ஏதோ ஒன்று பறிபோகப் போகிறது என்பதுபோல அவர்கள் பதறுகிறார்கள்.

இரண்டாவதாக, இவர்களில் அநேகர் இதற்கு முன் பொது வேட்பாளர் தொடர்பில் எழுதப்பட்டவற்றயும் கூறப்பட்டவற்றையும் ஆழமாக வாசித்திருக்கவில்லை மட்டுமல்ல, அண்மையில் வெளியிடப்பட்ட சிவில் சமூகங்களின் கூட்டு அறிக்கையையும் வாசித்திருக்கவில்லை, அல்லது விளங்கிக் கொள்ளவில்லை.

ஈழத் தமிழர்கள் மத்தியில் ஒரு விடயத்தை குறித்த ஆழமான வாசிப்போ விளக்கமோ இன்றிக் கருத்து கூறுபவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. பொது வேட்பாளரை எதிர்க்கும் பெரும்பாலானவர்கள் அப்படிப்பட்டவர்கள் தான். அவர்கள் மட்டுமல்ல பொது வேட்பாளரை ஆதரிப்பவர்கள் மத்தியிலும் அப்படிப்பட்டவர்கள் உண்டு. விளக்கமின்றி ஆதரிப்பது.

மூன்றாவது, இவர்கள் இவ்வாறு பதட்டம் அடைவதும் எதிர்ப்பதும் எதைக் காட்டுகின்றது என்றால் பொது வேட்பாளர் என்ற கருத்துருவம் பலமாக மேலெழுந்து வருகிறது என்பதைத்தான்.

சில பத்திரிகைகள் எழுதுகின்றன, தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகிறவர் இலங்கை முழுவதும் உள்ள தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றவர் என்று. ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவை முன்வைப்பவர்கள் அப்படி எங்கேயும் கூறியதாகத் தெரியவில்லை. பொது வேட்பாளர் தமிழ் தேசிய நிலைப்பாட்டின் குறியீடு என்பது அழுத்தமாக ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

இரண்டாவதாக, பொது வேட்பாளர் யார் என்பதை குறித்து இதுவரை யாரும் முடிவு எடுக்கவில்லை. சில அரசியல்வாதிகள் அல்லது சில சமயப் பெரியவர்கள் கூறுபவற்றை வைத்து மட்டும் அதைக் குறித்து கருத்துகூற முடியாது.

அதாவது ஒன்றைப் பற்றி எழுதுவதற்கும் விமர்சிப்பதற்கும் முதலில் அதைப் பற்றிய ஆழமான விளக்கமோ வாசிப்போ இல்லை என்பதைத்தான் அண்மைக்கால செய்திகளும் யுடியூப் காணொளிகளும் திரும்பத்திரும்ப நிருபிக்கின்றன.

ஆனால் இந்த விடயத்தை எதிர்க்கும் அரசியல்வாதிகள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். யாருடன் எங்கே டீல் செய்வது? தமிழ் வாக்குகளை எப்படி வெற்றுக் காசோலைகளாக ஒரு சிங்கள வேட்பாளரை நோக்கித் திருப்பி விடுவது? அடுத்த தேர்தலில் எந்த டீல் அதிகம் லாபமானது? போன்ற விடயங்களில் அவர்கள் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். அவர்கள்தான் ஒரு பகுதி ஊடகவியலாளர்களையும் யு டியுப்பர்களையும் இயக்குகிறார்கள் என்ற ஒரு சூழ்ச்சி கோட்பாடும் உண்டு.

அச்சூழ்ச்சி கோட்பாடு உண்மையாக இருந்தாலும் கூட அதை தவறு என்று கூற முடியாது. ஏனென்றால் அரசியலில் ஒரு கருத்தை முன்வைக்கும் தரப்பு அதை எப்படி மக்கள் மயப்படுத்தலாம் என்று சிந்திக்கும். அதற்கு தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஊடகங்களையும் யூடியூப்பர்களையும் அந்த தரப்பு பயன்படுத்தும். பொது வேட்பாளர் தொடர்பிலும் அதுதான் நடக்கின்றது.

அவ்வாறு பொது வேட்பாளருக்கு எதிராக எழுதுபவர்களும் கதைப்பவர்களும் பின்வரும் விடயங்களை கூறி வருகிறார்கள்.

முதலாவதாக, பொது வேட்பாளர் எனப்படுகின்றவர் ஆபத்தான ஒரு பரிசோதனை. அதில் தோற்றால் அது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியலையே தோற்கடித்து விடும் என்பது. இரண்டாவது பொது வேட்பாளர் சிங்கள மக்களை உசுப்பேத்தி விடுவார் என்றும் இனவாத அலை ஒன்றை அவர் தோற்றுவிப்பார் என்றும் கூறப்படுவது. மூன்றாவது, பொது வேட்பாளர் ரணிலை வெல்ல வைப்பதற்கான ஒரு கருவி என்பது. அதாவது சஜித்துக்கு போகக் கூடிய வாக்குகளை அவர் கவர்ந்து விடுவார். அது அதன் தர்க்கபூர்வ வளர்ச்சியாக ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைத்து விடும் என்பது.

இந்த மூன்று விமர்சனங்களையும் இன்று இந்த கட்டுரையில் பார்க்கலாம். முதலாவதாக, பொது வேட்பாளர் தோற்கக்கூடாது என்று கூறுபவர்களின் வாதம். உண்மைதான் தோற்கக் கூடாது அவ்வாறு தோற்கக் கூடாது என்று சொன்னால் அதற்காக தமிழ் மக்கள் கூட்டாக உழைக்க வேண்டும். அதற்குத் தான் ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுகின்றது. அரசியல் சமூகமும் சிவில் சமூகமும் இணைந்த ஒரு கட்டமைப்பை உருவாக்கும் பொழுது, இரண்டு தரப்பும் ஒன்றை மற்றொன்று பலப்படுத்தி அந்த முயற்சியை முன்னெடுக்கலாம், அதே சமயம் தேர்தல் அரசியல் எனப்படுவது வெற்றியும் தோல்வியும் கலந்ததுதான்.

தோல்வியைக் காட்டிப் பயப்படுத்தும் எல்லாருக்கும் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மிகப்பெரிய திருப்பகரமான வெற்றி எதையுமே பெற்றிருக்கவில்லை. இந்த லட்சணத்தில் தமிழ் மக்கள் இனிமேல்தான் தோற்க வேண்டும் என்று இல்லை. 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பெற்ற தோல்வியை விட ஒரு பெரிய, கொடுமையான, அவமானகரமான தோல்வி இனி வரப்போவதில்லை. எனவே கடந்த 15 ஆண்டு கால தமிழ் அரசியல் எனப்படுவது வெற்றியின் அரசியல் அல்ல. சிறிய வெற்றிகள் சில குறிப்பிட்ட செல்லக்கூடிய மக்கள் எழுச்சிகள் என்பவற்றிற்கும் அப்பால் தொடர்ச்சியான வெற்றிகள் அல்ல. அதாவது தமிழ் அரசியலை ஒரு புதிய கட்டத்திற்கு திருப்பக்கூடிய வெற்றிகள் அல்ல. எனவே தோல்வியைக் காட்டி பயமுறுத்தும் அரசியல்வாதிகள் தாங்கள் ஏற்கனவே தோற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை மறைகிறார்களா?

கடந்த 15 ஆண்டுகால தோல்விகரமான அரசியல் பாதையில் இருந்து தமிழ் அரசியலை திருப்பகரமான விதத்தில் தடம் மாற்ற ஒரு பரிசோதனை முன்னெடுக்கப்படுகின்றது. அதில் தோற்கலாம் வெல்லலாம். ஆனால் அது பரிசோதனை. இப்போது இருக்கும் தோல்விகரமான பாதையில் இருந்து தமிழரசியலை திசை மாற்ற முயற்சிக்கும் ஒரு பரிசோதனை. எனவே தோல்வியைக் குறித்து அச்சப்படுவோர் அல்லது தோல்வியை காட்டிப் பயமுறுத்துவோர், தாங்கள் ரகசியமாக டீல் செய்ய முயற்சிக்கும் அரசியல்வாதியின் தோல்வியை குறித்து கவலைப்படுகிறார்களா? அல்லது தமிழ் மக்களின் தோல்வியை குறித்து கவலைப்படுகிறார்களா?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் வெல்லப் போவதில்லை. அவர் ஜனாதிபதியாக வரப்போவதும் இல்லை. ஆனால் அவர் தென்னிலங்கை வேட்பாளர்களின் வெற்றிகளைக் கேள்விக்கு உள்ளாக்குவார். அதைவிட முக்கியமாக, தமிழ்ப் பொது நிலைப்பாடு ஒன்றை நோக்கி தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவார். தமிழ் அரசியலை கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து ஒரு பொதுகட்டமைப்பின் மூலம் அடுத்தடுத்த கட்டங்களுக்கு கூர்ப்படைய வைக்கத் தேவையான ஒரு பொதுத் தளத்தை அவர் பலப்படுத்துவார். அதற்கு ஜனாதிபதித் தேர்தல் ஒரு களமாக பயன்படுத்தப்படுகின்றது என்பதுதான் இங்கு முக்கியம். தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ் தேசிய ஐக்கியத்தை பலப்படுத்தும் ஒரு பரிசோதனை. அதில் எத்தனை முறை தோற்றாலும் அதைவிட வேறு வழி தமிழ் மக்களுக்கு இல்லை.

இரண்டாவது, பொது வேட்பாளர் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத அலையைத் தோற்றுவிப்பார் என்பது. அப்படியென்றால் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத அரசியல் இப்பொழுது இல்லையா? ஆயின் மயிலத்த மடுவில் மேச்சல் தரையை பறிப்பது யார்? குருந்தூர் மலையில், வெடுக்கு நாறி மலையில் தமிழ் மரபுரிமைச் சின்னங்களைக் கைப்பற்ற முயல்வது யார்? இன ஒடுக்குமுறை இப்பொழுது இல்லை என்று கூறும் அனைவருமே அந்த ஒடுக்குமுறையை மறைமுகமாக நியாயப்படுத்துகிறார்கள்.

மூன்றாவது காரணம், தமிழ்ப் பொது வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவின் கருவி என்பது. ஏனென்றால் அவர் சஜித் பிரேமதாசாவுக்கு சில தமிழ் அரசியல்வாதிகளால் திருப்பப்படும் தமிழ் வாக்குகளை அவர் தடுப்பார். அதனால் சஜித்தின் வெற்றி வாய்ப்புக்கள் மேலும் குறையும். அது ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி வாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்று ஓர் அச்சம். அதாவது, ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு செல்லக்கூடிய வாக்குகளை தமிழ் வேட்பாளர் கவர்வதன் மூலம் மற்றொரு சிங்கள வேட்பாளர் வெல்வதற்கு மறைமுகமாக உதவுவார் என்று ஒரு சந்தேகம் முன்வைக்கப்படுகிறது.

அவ்வாறு சந்தேகிப்பவர்களுக்கு ஒரு பதில் உண்டு. தென்னிலங்கையில் உள்ள வேட்பாளர்கள் யாரோடும் பொது வேட்பாளர் பேச்சுவார்த்தைக்கு போகத் தயார் என்று வைத்துக்கொள்வோம். அதற்கு தெனிலங்கை வேட்பாளர்கள் இனப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதனை பகிரங்கமாக முதலில் கூற வேண்டும். அதன்பின் அதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்களாக இருந்தால், அது தொடர்பான ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை மூன்றாவது தரப்பின் கண்காணிப்பின் கீழ் செய்யப்பட வேண்டும். அதற்குத் தயாரான தென்னிலங்கை வேட்பாளரோடு தமிழ்ப்பொது வேட்பாளர் பேச்சுவார்த்தை நடத்தலாம். அதாவது தமிழ்ப் பொது வேட்பாளரின் வருகையால் தோற்கப் போகிறேன் என்று அஞ்சும் அரசியல்வாதிகள் தமிழ் மக்களோடு உடன்பாட்டுக்கு வரத் தயாரா? அதுவும் மூன்றாவது தரப்பின் கண்காணிப்போடு? அந்த அரசியல் வாதிக்குத் தமிழ் வாக்குகளைத் திருப்பிவிட முயல்பவர்கள் அந்த அரசியல்வாதியிடம் இதுபற்றி எடுத்துரைப்பார்களா?


இல்லை. யாருமே தயாரில்லை. சில அரசியல் தலைவர்களோடு தனிப்பட்ட டீலுக்கு போகத்தான் சிலர் தயாராக இருக்கிறார்கள். தமிழ் மக்களோடு உடன்பாட்டுக்கு வரும் ஒருவர் தமிழ் மக்களின் ஒரு தொகுதி வாக்கைப் பெறலாம். ஆனால் சிங்கள பௌத்த வாக்குகளை இழந்து விடுவார் என்பதுதான் இலங்கைத்தீவின் இன யதார்த்தம். இனவாதம் இனிமேல்தான் தூண்டி விடப்படப் போகிறது என்று கூறுபவர்களுக்கு இது சமர்ப்பணம்.

தேசியவாத அரசியல் எனப்படுவது ஒரு மக்கள் கூட்டத்தை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவதுதான். தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கூட்டிக் கட்டுவதைத்தமிழ்த் தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்துவதைத் தென்னிலங்கை வேட்பாளர்களுக்குவெற்றுக் காசோலையாகப் போகும் தமிழ் வாக்குகளை அவற்றின் கேந்திர முக்கியத்துவத்துவதையுணர்ந்து, புத்திசாலித்தனமாக பயன்படுத்துவதை எதிர்க்கும் ஒவ்வொருவரும், தமிழ்மக்கள் சிதறிப்போவதை ஆதரிக்கிறார்கள். அல்லது தமிழ்மக்கள் தொடர்ந்தும் தோற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்களா?

---

## வீணாவின் கவிக்கணை

வாழ்வில் எத்தனையோ
உறவுகள் வரலாம் போகலாம்,
ஆனால் நம் தாயைப்போல்
முகம் பார்த்தே நம் மனநிலை
புரிந்து கொள்ளும் உறவு
நமக்கு கிடைப்பது அரிது,
தாய்க்கு பின் வரும் நம்
வாழ்க்கை துணையும்
எல்லோருக்கும் இன்பமாய்
அமையும் என்பதற்கு எந்த வித
உத்திரவாதமும் இல்லை,
வாழும் காலம் யாருக்கும்
நிரந்தரமும் இல்லை,
அதனால் பிள்ளைகளே,
இருக்கும் வரை உங்கள்
தாயையும் அவள் உங்கள்
மீது வைத்திருக்கும்
பாசத்தையும் ,
உதாசீனப்படுத்தாமல் அன்பு
செலுத்தி வாழ பழகுங்கள்.
அப்படி மட்டும் செய்துவிட்டால்
ஒவ்வொரு நாளும் அன்னையர் தினமே.




# 15 Years Since End of War
# “No End to Torture and Sexual Violence Against Tamils”

## Siva Parameswaran - Senior International Journalist

A damning report by a leading international watchdog has revealed continued abduction and torture including sexual abuse of Tamils even 15 years after the brutal civil war came to a bloody end.

The situation is not different under the regime of the present President Ranil Wickremasinghe who came to power in July 2022 following the ousting of the war-crimes accused former President Gotabaya Rajapaksa by the popular uprising ‘Aragalaya’.

At least 11 such arbitrary detentions took place in the six months since President Wickremesinghe took charge as President through a parliamentary provision.

“Sri Lankan security forces continue to abduct and disappear young Tamil men and women, and subject them to serious physical sexual torture” the new report by the International Truth and Justice Project (ITJP) has revealed.

The report is based on the testimonies of 123 Tamils both male and female in the age group between 20-39. For fear of safety and life, the Tamil victims whose testimonies form the basis of this report all now live in exile outside Sri Lanka.





ITJP says their latest report covers seven years during which time the war-affected Tamils were unlawfully picked up and detained by the state security forces a total of 139 times.

Its report further said the methods used by the Sri Lankan security forces were similar to what happened in 2009 since the war ended and included abduction, disappearance, and torture against those former LTTE cadres and the Tamil civilians who either surrendered or handed over to the army by their families after the war ended.

The constitutionally mandated Office for Missing Persons (OMP) has not even found a single person who went missing after they were handed over or surrendered to the security forces.

“Impunity is generally defined as the wielding of power without facing any consequences for the commission of crimes, and which over time becomes deeply ingrained within political systems and cultures. In Sri Lanka, impunity has been entrenched over decades without any accountability for serious international crimes committed by the security forces”, said ITJP’s Executive Director, Yasmin Sooka.

Expressing deep dismay about the continuing culture of impunity she fears the Tamils will continue to suffer if the international community remains a mute spectator.



“It is unlikely to stop unless the international community exerts greater pressure on Sri Lanka to deal with security sector reform and root out those officials responsible for this culture of violence directed against Tamils. The individuals who gave the statements analyzed in this report are only a small subset of all Tamils who claim asylum in the UK or elsewhere.”

Out of the 139 detentions analyzed by the ITJP 65 persons were picked up by the state agencies either from their own home or that of their relatives, witnessed by the family members. Tamils were also picked up on their way to and back from work.

In a stark reminder of wartime atrocities, those Tamils abducted recently and who bore testimony in the ITJP’s latest report were blindfolded, with their hands tied behind, and bundled into a white van. Subsequently, most were taken to unknown locations with the families being kept in the dark.

While being held at such secret detention centers, the detainees according to their testimonies were tortured, the least being severely beaten.

Torture methods include suffocating with a polythene bag, and burning by cigarettes or other heated objects. Close to 50 detainees were subjected to forced drownings while more than 30 were suspended by ropes. Witnesses said they were forced to undergo multiple forms of torture.

In March 2022, a 28-year-old man was picked up in Jaffna, the hotbed of Tamil politics by men in civil clothes, and detained for 10 days.

Speaking about the ordeal he suffered at the hands of the security forces he told ITJP: “A petrol-soaked polythene bag was put back over my head. They repeated this four or five times before dragging me to a plastic barrel filled with water. My head was submerged repeatedly for what felt like half an hour. Every time my head was lifted out so that I could breathe, I was told to tell the truth and provide them with some names. I was so exhausted I collapsed to the floor and was dragged back to the room where I was kept.”

Sexual torture was no exception. The brutality was so gruesome it included at least one of the five kinds of sexual violence: the squeezing of genitals; forced oral sex; penile rape; anal rape with a rod; and forced masturbation. Among the 51 detained who were raped, 11 were women.

“The number of abductions, detentions, torture, and sexual tortures illustrate how systematic and widespread these violations amounting to serious crimes are,” the ITJP report says.

Volker Türk, the UN High Commissioner for Human Rights, expressed his deep concern about the Human Rights situation in Sri Lanka, in his report to the Council during its 55th session in March this year (2024).

“I remain deeply concerned about recurring, credible accounts received by my office of abductions, unlawful detention, and torture, including sexual violence, by the Sri Lankan police and security forces, some of which allegedly took place in 2023, mainly in the north and east of the country.”

Sri Lanka’s foreign ministry claims that the government had taken multiple steps since the end of the war to address human rights concerns and promote reconciliation including releasing land to Tamil owners, limiting the military to camps in the north and east of the country, and appointing officials to look into cases of people reported missing.

“We look at human rights as a continuous process... and we are committed to engaging with international partners including non-governmental organisations to take the reconciliation process forward,” Tharaka Balasuriya, state minister of foreign affairs had told Reuters when asked about the ITJP report.

While the past and the present Presidents have failed to investigate war-crimes allegations the other presidential contenders from the opposition have admitted former army commanders who are yet to be investigated for alleged international crimes into their respective parties. A veteran leader of the National People’s Power Lal Kantha has publicly announced several times that those who rise against their government will be severely dealt with.

Even the JVP is accused of not campaigned for even crimes committed against their own cadres including the killing of their leader Rohana Wijeweera and their current leader Anura Kumara Dissanayake says “we need to forget what happened in the past and move forward”.

It is interesting to note the JVP and NPP leader made the comment in Canada recently.



உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2024

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினாறாவது முறையாக நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் சித்திரை மாதம் பதினேழாம் நாள் (ஆங்கிலம்29-04-2024) திங்கட்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 09ம் நாள் ஆங்கிலம் 22-05-2024 புதன்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 23-05-2024 வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகம பூஷணம், சிவாகம திலகம்
சிவஸ்ரீ பத்ம ஜெயராம குருக்கள் (இலங்கை)

ஆலய குருமார்:
சிவஸ்ரீ பத்ம ஜெயராம குருக்கள்(இலங்கை)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ உமாசுதன் சர்மா (இலங்கை)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

28-04-2024 ஞாயிறு மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 29-04-2024 | திங்கள் | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 30-04-2024 | செவ்வாய் | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 01-05-2024 | புதன் | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 02-05-2024 | வியாழன் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம்<br>திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 03-05-2024 | வெள்ளி | திரு. குமாரசாமி பிரபாகரன் நளினி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. கதிர்காமநாதன் குடும்பம்<br>திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 04-05-2024 | சனி | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | கப்பல் திருவிழா |
| 07 | 05-05-2024 | ஞாயிறு | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் தையிட்டி, காங்கேசன்துறை | ஓர் அன்பர் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 06-05-2024 | திங்கள் | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 07-05-2024 | செவ்வாய் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ஜெகதேவா சோமாஸ்கந்தன் குடும்பம் - கொக்குவில் | மூஷிக வாகனம் |
| 10 | 08-05-2024 | புதன் | ஓர் அன்பர் | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 09-05-2024 | வியாழன் | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மயில் வாகனம் |
| 12 | 10-05-2024 | வெள்ளி | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன், தனுஷன், அனோயன், நிக்ஷன் குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 11-05-2024 | சனி | திரு சசிலேகா யோகராசா குடும்பம் சுன்னாகம் | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | குதிரை வாகனம் |
| 14 | 12-05-2024 | ஞாயிறு | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 13-05-2024 | திங்கள் | திரு. தவராசா (சுவிசன்)<br>திரு. தவராசா (சுவிகன்) அனலைதீவு | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 14-05-2024 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 15-05-2024 | புதன் | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 16-05-2024 | வியாழன் | திரு. பொன்னையா கனகலிங்கம குடும்பம் அல்வாய் | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா, இந்தியா | நர்த்தன வடிவம் |
| 19 | 17-05-2024 | வெள்ளி | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 18-05-2024 | சனி | திரு. சிவநேசராசா காளிராசா குடும்பம் மீசாலை | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 19-05-2024 | ஞாயிறு | ஓர் அன்பர் | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 20-05-2024 | திங்கள் | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 21-05-2024 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு சாம் குடும்பம் சிங்கப்பூர் | சப்பறத் திருவிழா |
| 24 | 22-05-2024 | புதன் | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | திரு முத்துக்குமார் தயாவதி குடும்பம் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 23-05-2024 | வியாழன் | தீர்த்தத் திருவிழா -<br>திரு லக்சன் குடும்பம் (சென்னை) | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா<br>சண்டேஸ்வரர் விழா<br>ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 24-05-2024 | வெள்ளி | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | திரு. சிவகுமார் குடும்பம்<br>திரு. இராஜேஸ்வரன் குடும்பம்<br>A1 Florist - Brampton | காலை: பிராயச்சித்தம்<br>மாலை: வைரவர் மடை |
| 27 | 25-05-2024 | சனி | திரு. திருவருள் கனகசபை குடும்பம் அனலைதீவு | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி மூன்றாவது தடவையாக ஜுலை மாதம் 25, 26, 27ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - அபிராம சுந்தரம் ராஜேஷ்
முனிராஜ் முனிரெத்தினம் - அண்ணாதுரை மணிகண்டன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்




புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)

ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)


UTHAYAN INTERNATIONAL
AWARD FESTIVAL - 2024
உதயன் சர்வதேச விருது விழா 2024
UTHAYAN
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2024
MAY 26th 2024
Sunday, 6.00 PM
THIS YEAR'S AWARDS ARE...
இவ்வருடத்திற்குரிய விருதுகள்...
UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD- ONTARIO
UTHAYAN LEADERSHIP AWARD
UTHAYAN YOUTH ICON AWARD- ONTARIO
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-TAMIL NADU
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-MALAYSIA
UTHAYAN SPECIAL AWARD – EUROPE
The Estate Banquet Hall and Event Centre
430 Nugget Avenue, Scarborough, Ontario


SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
416-291-8500
LET LOVE BIND US ALL TOGETHER
ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
இணைந்து வழங்கும்
18ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மேமாதம் 11 சனிக்கிழமை
பகல் 2:30 மணிக்கு
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.


அடகுமாடம் - பவுண் வாங்கி - தங்க நகை கடன்
கனகாம்பிகை
அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough
பட்டு உலகில் தனித்துவப் படைக்கும்
Fashion World Inc.
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com
7393 Markham Road, Unit 82,83 & 84
Markham, ON L3S 0B5
குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
THANA
416.728.5772
Thana Manickavasagar
Shop for Auto Parts
747 AUTOPARTS
Markham 905.471.4447
Scarborough 416.285.4447
DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough
ஸ்ரீரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
647.702.2159
ஈழத்தமிழ் மகனின் நிர்வாகத்தின் கீழ்
TECHSOURCE
Computer & Electronics Liquidator
Etobicoke 647-352-2229
Scarborough 416.757.9111
SARAVANAA BHAVAN
South Indian Vegetarian Cuisine
Scarborough 416 293 7755
Mississauga 905 290 0769
the co-operators
Vel Insurance Services Inc.
சரியான காப்புறுதியை குறைந்த கட்டணத்தில் பெறுவதன் மூலம் மனதுக்கு நிம்மதியை பெறுங்கள்
416.396.0707
Senthooran Punithavel
MORTGAGE ARCHITECTS
THAYANANDA (DARSHAN) THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca
பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
1209 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112 416-738-1271
Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box,
Garbage Bags
Paper Towels
Toilet Papers,
Napkins
All kind of Plastic Bags
SHY ENTERPRISE
Retailer of Paper Products
416.602.9714 - 905.205.0011
ERAA SUPER MARKET
5930 Finch Ave. E. Scarborough, ON Tel: 416.292.2622
2607 Eglinton Ave. E. Scarborough, ON Tel: 416.269.2622


கருவறைக் கோவில்
பெற்றவளை போற்றுவோம்!
ARABI PRODUCTIONS
ஆரபி படைப்பகம்
வழங்கும்
THE GUARDIAN HOME REALTY INC., BROKERAGE
SUTHARSAN NADARAJAH வின்
கருவறைக் கோவில்
MAY 12, 2024
Time : 6:00pm
QUEEN PALACE BANQUET HALL
1173 Brimley Rd, Scarborough, ON M1P 3G5
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
ஆரோசை இசைக்குழுவின் இசையில்
அன்னையர் தினத்தில் நடைபெறும் மாபெரும் இசை நிகழ்ச்சியும்
இராப்போசன விருந்தும்


topchoice
WE OFFER FINANCE
FREE DELIVERY IN GTA
LOWEST PRICE IN GTA
GREAT SERVICE IN GTA
CHRISTY
416.276.7021
THE GUARDIAN
SUTHARSAN NADARAJAH
Fishito
DRIED FISH
AVAILABLE IN SHOPS NEAR YOU
WINSMART
FACILITY MAINTENANCE SERVICES
MORTGAGE ARCHITECTS
Arunshanker Mani
Mortgage Agent
647-887-2677
416-754-8881
2761 Markham Rd Unit - 3A, Scarborough, ON M1X 0A4
RE/MAX
REALTOR RAMANAN
RAMANAN
SANTHIRASEGARAMOORTHY
416.290.6000
info@getnewhomes.com
www.getnewhomes.com
K T GROUP
Commercial Cleaning
Security Services
Employment Services
Restoration Services
SV Media Ltd
tamil one TV HD
Voice of Tamil Canadians
KT media
Media & Stream Solutions
info@kt-media.ca
www.kt-media.ca
Cell +1-416-617-3924



# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம் ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

## 24-வது ஆண்டு விழா (2024)


ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் - டொரொன்ரோ

3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8

E-Mail: sakthi1226@gmail.com | Tel: 416-293-1226 | Fax: 416-293-1215







கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைதா நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

**அம்பிகை அடியார்க்ளே**

ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து நிகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவனம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் - நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை 29 ம் நாள் **(11.05.2024)** சனிக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:00 மணிக்கு மேல் 9:30 மணிக்குள் கொடியேற்றப்படும்.

**மே 25 ஆம் திகதி வைகாசி திங்கள் 12-ம் திகதி காலை 8:00 மணி தொடக்கம் 9:00 மணிக்குள் மூலத் நட்சத்திரம், மிதுன லக்னத்தில் தேர் வடம் பிடிக்கப்படும்.**

இவ்விழாக்காலங்களில் நேர, கால, நிர்ணயம் தவறாமல் நடைபெறும் கிரியைகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு பால், தயிர், பழங்கள், பூக்கள் போன்ற அபிஷேகத் திரவியங்களையும் வழங்கி அம்பாளின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**காலை**

8:30 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:30 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

திருவிழாக்காலங்களில் அனைவரும் வருகை தந்து
அம்பிகையின் திருவருள் பெற்று வாழ்வீர்களாக!
இங்கனம் : **ப்ரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்**

**மாலை**

5.00 மணிக்கு கும்ப பூஜை
5.30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6.00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8.00 மணிக்கு வெளிவீதி வீதி வலம் வருதல்
8.45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

**புதிய வேத பாடசாலை ஒன்று ஆரம்பிக்கவுள்ளது.**
**மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும்.**

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support"வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல் எனும் ,முதியவர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலான சேவைகளை வழங்குகிறது.

## இலவச சேவை

- உணவு விநியோகம்,
- தன்னார்லர்கள் மூலம் போக்குவரத்து சேவை: மருத்துவமனை நியமனங்கள், மருத்துவரைபார்வையிடல், மளிகைப்பொருள் கொள்வனவு நிலையங்கள் போன்றவை
- முதியோருக்கான சிறு வீட்டு பராமரிப்பு
- நண்பர்களாக வீட்டுக்கு வருகை தருதல் - நட்பு உரையாடல்கள், மற்றும் திறன் வளர்ப்புஉதவிகள். (Zoom, YouTube, google search...)
- போக்குவரத்து சேவை - வழிபாட்டு தலங்கள், Mall, உணவு விடுதிகள் போன்றவை.

## எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

## டுறம் தமிழ் ஒன்றியம்

### வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல்




எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவை வழங்கப்படுகின்றது

PICKERING, AJAX,WHITBY, OSHAWA CLARINGTON, BROCK, UXBRIDGE ,SCUGOG,

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு - வீட்டில் ஆதரவளித்தல்

### இலவச உணவு விநியோக சேவை

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது

எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவைவழங்கப்படுகின்றது

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog





மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

dtaseniorsinhomesupport.ca

Canada

## Durham Tamil Association Evolving Elder Care -in Home Support for seniors

### Free Training

- Free Training and a certificate of completion from Computek College in Ajax
- 50 volunteer hours placement

### Benefits

- Free Vulnerable Check
- Unlock valuable life skills with Free Standard CPR and First Aid Training
- Volunteer Travel Expense $0.58/km
- Join us to make a postive impact on seniors lives while gaining valuable skills and exprences.

### Contact US


Office Hours: Monday through Friday 9:00am - 5:00PM

Contact Number:

- (647) 968-9549
- (647) 286-9549

**Durham Tamil Association**

66 Harwood Ave, S.Ajax L1S 2H6




### Serving Eight Municipalities

- Brock
- Oshawa
- Uxbridge
- Clarington
- Scugog
- Ajax
- Pickering
- Whitby

**For More Information Visit the website: dtaseniorsinhomesupport.ca**

## Volunteers Needed!

### தன்னலவாளர்கள் தேவை!





**Join our volunteer team and gain more than just experience – unlock valuable life skills while making a positive impact on seniors' lives in Durham!**

Volunteer Gala : Twice a Year!

- Summer Gala 2024
- Winter Gala 2024
- Spring Gala 2025
- September Gala 2025

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative | Canada

# இதைவிட இனியதும் உளதோ?




## கலாநிதி தமிழ்மணி அகளங்கன்

-----------------------------------------------

**நூல் - இனியவும் உளவோ**
**நூலாசிரியர் - அனலை ஆ. இராசேந்திரம், கனடா**

-----------------------------------------------



நீண்டகால இடைவெளிக்குப் பின் (2000) "பூவும் புல்லிதழும்" என்ற அனலை ஆ.இராசேந்திரம் அவர்களின் நூலைப் படிக்க முடிந்தது.

திருக்குறள் சார்ந்த இருபத்தாறு கட்டுரைகள் அடங்கிய அந்த நூலில் இரசனைக் கட்டுரைகளும், ஆய்வுக்கட்டுரைகளும் அடங்கி இருந்தன.

அது ஒரு சிறந்த நூல். இப்போது படித்துப் பார்க்கும் போதும் கூட பாராட்ட முடிகிறது. சலிப்பின்றி வாசிக்கத் தூண்டுகிறது. அவரது வேறு ஆக்கங்கள் எனக்குக் கிடைக்கவில்லை.

குறிப்பாக, யாப்பிலக்கணம் கற்ற சிறந்த கவிஞராக, யாப்புக்கிணங்கப் பாப் புனையும் இவரது "பூமழை" என்ற கவிதைத் தொகுப்பு எனக்குக் கிட்டவில்லை.

அனலை ஆ.இராசேந்திரம் அவர்கள் ஒரு அற்புதமான இரசிகர். என்பது முதலில் வியந்து பாராட்டத்தக்கது. அவர் ஒரு சிறந்த ஆய்வாளர் என்பது அடுத்துப் பாராட்டப் படவேண்டியது. இவை எல்லாவற்றையும் விட சிறந்த தமிழ்ப் பற்றாளர் என்பது என்னை அதிகம் கவர்கிறது.

அவரது இந்த "இனியவும் உளவோ" என்ற நூல் அவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமையையும், இரசனைத் திறத்தையும், வெளிப்பாட்டு உத்திமுறையையும் மிக உன்னதமாகக் காட்டுகிறது.

"இனியவும் உளவோ" என்ற வார்த்தைகளை "நறியவும் உளவோ" என்ற இறையனாரின் கவி வரிகள் நினைவூட்டுகின்றன.

"குறுந்தொகை" என்ற சங்க இலக்கிய நூலில் இடம்பெற்ற இறையனாரின் "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்ற அற்புதமான பாடலின் ஈற்றடி "நறியவும் உளவோ நீ அறியும் பூவே." என முடிகிறது.

இந்தப் பாடல் தான் தருமியிடம் சிவபெருமான் எழுதிக் கொடுத்தபாடல். அவன் அப்பாடலை செண்பகப் பாண்டியனிடம் கொடுத்ததும், நக்கீரர் பிழை பிடித்ததும். சிவபெருமான் புலவர் வடிவில் வந்து வாதாடியதும், "நெற்றிக்கண் திறக்கினும் குற்றம் குற்றமே" என நக்கீரர் விதண்டாவாதம் செய்ததும் விரிவாக ஆராயப் பட்ட விடையங்கள்.

"நறியவும் உளவோ" இங்கு "இனியவும் உளவோ" என்று நூலின் தலைப்பாகி இனிக்கிறது. இந்நூலாசிரியர் எவ்வளவு தன்னம்பிக்கையோடு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார் என்று எண்ணி எண்ணி வியக்கிறேன்.

இன்றைய இளைஞர்களுக்கு மட்டுமல்ல இன்றைய தமிழ்ப் பேராசிரியர்களுக்கே பழந்தமிழ்ப் பரிச்சயம் குறைந்து விட்டது. புனைகதைகளையும், புதுக் கவிதைகளையும் படித்துவிட்டு தமிழறிஞர்கள் என்று தம்மைத்தாமே சொல்லிக்கொள்வோர் பலர் இன்று இருக்கிறார்கள்.

அனலை ஆ..இராசேந்திரம் போன்று தமிழை இரசித்து, ருசித்து அனுபவித்து "நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற நல் நோக்கோடு எளிய நடையில், இனிய முறையில்,, வாசிக்கத்தூண்டும் வகையில் பழந்தமிழ் இலக்கிய இன்பத்தை அள்ளி வழங்கும் தகுதி படைத்தவர்கள் மிக மிகக் குறைவு என்றே சொல்லலாம்.

ஈழத்தில் வெளிவந்த பழந்தமிழ் இலக்கிய நூல்களைக் கற்கவேண்டும் அவற்றிலுள்ள சிறப்புக்களை வெளிப்படுத்தவேண்டும் என்ற அவரது நோக்கம், பேரவா அவருக்கு ஈழத்தில் இருக்கும் போது கிடைக்கவில்லை.. கனடாவில்தான் கிடைத்தது.

பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்கள் தொகுத்து இலங்கைச் சாகித்திய மண்டலம் வெளியிட்ட "ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" நூல் (1966) மூலம் தனது அவாவைச் சிறிது தணிக்க முயன்றிருக்கிறார் நூலாசிரியர்.

இந்த நூல் விரிவு படுத்தப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுவரைக்கும் உள்ள தமிழ்க் கவிஞர்கள் சிலர் பற்றிய குறிப்புக்களோடு கடந்த ஆண்டில் (2018) வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியை இவ்விடத்தில் தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள இருபத்தி மூன்று கட்டுரைகளில் சங்க கால ஈழத்துப் புலவரான ஈழத்துப் பூதந்தேவனாரின் அகநானூறு, குறுந்தொகைப் பாடல்கள் நான்கு, நாட்டுப் பற்று என்ற உணர்வின் மூலம் முன்னிலைப் படுத்தப்படுகிறது.

ஈழத்து இலக்கிய வரலாறும் தமிழகத்து இலக்கிய வரலாற்றோடு தோன்றி வளர்ந்தது என்பதைப் பெருமையோடு காட்டுவதற்காகவே இந்த நான்கு அகத்திணைப் பாடல்களையும் இந் நூலாசிரியர் எடுத்து நயந்து வியந்து மகிழ்ந்து நான்கு கட்டுரைகளாக இந்நூலில் எழுதியுள்ளார் என நினைக்கிறேன்.

"கலித்தொகை" என்ற சங்ககால நூலிலிருந்து இரண்டு பாடல்களை எடுத்து இரண்டு கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றில் ஒன்று "வீதியில் ஒரு பெண் யானை" என்ற தலைப்பிலானது.

சங்கப் புலவர்களில் தலை சிறந்த புலவரான கபிலரால் பாடப்பட்ட ஒரு பாடலை நன்றாக இரசித்து சிறப்பாக எழுதியுள்ளார்.

ஒரு பேரழகி தெருவிலே செல்கிறாள். அவளைப் பார்த்த ஓர் இளைஞன் அவளது அழகிலே ஈடுபட்டு மயங்கித் தன் நிலை இழக்கிறான். அவளின் அழகில் மயங்கித் தன்னைப்போல எத்தனைபேர் தவிப்பார்களோ என்று எண்ணுகிறான்.

அவ்வளவு அழகாக அவள் இருப்பது அவளின் தவறில்லை. அவளை தெருவிலே நடமாட விட்டிருக்கிறார்களே அவர்களது உறவினர்கள் அவர்கள்தான் தவறு செய்தவர்கள் என்று சொல்ல நினைக்கிறான். ஆனால் அப்படிச் சொல்லவும் மனம் வரவில்லை.

இறுதியாக, அவன் அந்த நாட்டு அரசன் மேல் தான் தவறு என்று கூறுகிறான். எதிரில் செல்பவர்களை அடித்துத் துவம்சம் செய்யும் மதம் பிடித்த யானையை நீராட்டுவதற்காகத் தெருவழியே கொண்டுசெல்ல வேண்டியிருந்தால் பறை அறைந்து, தெருவில் செல்வோரை விலக்கிவிட்டே கொண்டு செல்லவேண்டும் என்று அரசன் சட்டம் போட்டிருக்கிறான்.

இதேபோல இத்தகைய அழகி ஒருத்தி வெளியிலே செல்வதாக இருந்தால் இளைஞர்கள் எவரும் அந்த வீதியிலே வரக்கூடாது என்று பறை அறைந்து செய்தி பரப்பி விட்டுத்தான் செல்லவேண்டும் என்று கட்டளை இட்டிருக்காத அரசனே தவறு செய்தவன்.என்கிறான் இளைஞன்.

நீயும் தவறிலை, நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடை யான்.

"நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்கு" என உவமை சொல்லக் கபிலரைப்போல வேறுயாரால் முடியும். இதனை இரசிக்க அனலை ஆ. இராசேந்திரத்தைப்போல வேறு யாரால் முடியும்.

கவியரசர் கண்ணதாசன் இந்தப் பாடலைப் படித்திருக்கக் கூடும். அழகாக அவரது "கண்படுமே பிறர் கண் படுமே நீ வெளியே வரலாமா." என்ற பாடலில் இந்தக் கற்பனை கொஞ்சம் கலந்துள்ளதைக் கண்டுகொள்ளலாம்.

ஆடவர் எதிரே செல்லாதே
அம்பெனும் விழியால் கொல்லாதே
இந்த
மானிடர் உலகில் வாழ்கிற வரைக்கும்
தனியே வருவது பாவம்!

கவியரசர் கண்ணதாசனின் "உன்னைச் சொல்லிக் குற்றம் இல்லை. என்னைச் சொல்லிக் குற்றம் இல்லை. காலம் செய்த கோலமடி. கடவுள் செய்த குற்றமடி." பாடல் இப்பாடலின் உந்துணர்வால் வந்திருக்கலாம்.

"சந்தனப் பாவையர்" என்ற கலித்தொகைப் பாடல் சார்ந்த கட்டுரை முதற் கட்டுரையாக அமைந்துள்ளது. இக் கலித் தொகைப் பாடலில் வரும் பாடல்வரிகளும் கருத்தும் கவியரசர் கண்ணதாசனால் இரண்டு பாடல்களில் கையாளப் பட்டுள்ளன..

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம்
என் செய்யும்"

இவை கலித்தொகை வரிகள் "அந்த சிவகாமி மகனிடம் சேதி சொல்லடி" என்ற பாடலில் வரும்

"மலையின் சந்தனம் மார்பின் சொந்தம்
மங்கையின் இதயமோ காளையின் சொந்தம்"

என்று கவியரசர் கண்ணதாசன் எழுதுகிறார்.. அத்தோடு

"சிப்பியிலே முத்து --- அது
சிப்பிக் கென்ன சொந்தம்
தென்னையிலே இளநீர் --- அது
தென்னைக் கென்ன சொந்தம்.
ஓங்கிவரும் முல்லை --- அது
ஒருகொடியின் பிள்ளை
எடுத்துக்கொண்டு போனால் --- அது
கொடிக்குச் சொந்தமில்லை."

எனவரும் பாடலில் கவியரசர் கண்ணதாசன் மேற்காட்டிய கலித்தொகைப் பாடலை நினைவூட்டுகிறார்.

ஈழத்தில் பாடப்பட்ட திருக்கரசைப் புராணம், திருச்செல்வர் காவியம், தத்தைவிடு தூது, சித்திரவேலாயுதர் காதல், கனகி புராணம், மாவை மும்மணிக் கோவை, பறாளை விநாயகர் பள்ளு,முதலானவற்றிலிருந்து ஏழு கட்டுரைகளை எழுதி அவற்றைப் பற்றிய சிறந்த அறிமுகத்தைச் செய்திருக்கிறார்.

திருகோணமலை த.சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் இயற்றிய "தத்தைவிடு தூது" நூல் மூலம் பெண்விடுதலைப் பாடல்களை மகாகவி பாரதியாருக்கு முன்பே ஈழத்தவரான இவரே பாடினார் என்பதை "புரட்சித் தூது" என்ற கட்டுரைமூலம் வெளிப்படுத்தி ஈழத்துக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.

திருகோணமலை த.சரவணமுத்துப் பிள்ளை அவர்கள் எழுதிய "மோகனாங்கி" என்ற நாவலே தமிழில் முதல் சரித்திர நாவல் என்பதும் நினைவு கொள்ளத்தக்கது.

அத்தோடு மகாகவி பாரதியாருக்கு முன்பு தெல்லிப்பளை பாவலர் துரையப்பா பிள்ளை அவர்கள் "பெண் விடுதலைக் கும்மி" என்ற பெயரில் கும்மிப் பாடல்களைப் பாடியிருக்கிறார் என்பதும் நினைவு கூரத்தக்கது.

இன்னும் பல இலக்கியப் படைப்புக்களுக்கு நம் ஈழத்தவர்களே முன்னோடிகள் என்பதையும் விரிவாக ஆராயலாம்.

ஈழத்தின் சிறந்த புலவர்களான நவாலியூர் சோமசுந்தரப் புலவர், பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை, சுவாமி விபுலானந்தர், குருகவி ம.வே. மகாலிங்க சிவம், நீர்வை சிற்சபேசன், வித்துவ சிரோமணி ந..ச.பொன்னம்பலபிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை, பேராசிரியர் அழகு சுந்தரம், கவிஞர் கந்தவனம்,முதலானோரின் சிறந்த கவித்துவ வெளிப்பாடுகளைக் காட்டும் ஏழு கட்டுரைகள்,

தமிழ் மொழியிலிருந்து பிறந்ததாகச் சொல்லப்படும் தெலுங்கு மொழியின் இடைக்கால வரிவடிவமான பிராகிருத மொழியில் உள்ள இரண்டு பாடல்களை கைக்கிளை, பெருந்திணை என்ற எமது சங்க இலக்கிய மரபோடு பொருத்தி எழுதப் பட்ட இரண்டு இரசனைக் கட்டுரைகள், "பிஞ்சுப் பழம்" என்ற சைவ சித்தாந்த கருத்தமைந்த கட்டுரையுமாக இருபத்தி மூன்று கட்டுரைக் கற்களைக் கொண்டு இந்தக் கலைக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

கானகத்தில் காந்தர்வத் திருமணம் செய்து கைவிட்டுப் போன துஷ்யந்தனை நாடிச் செல்ல முனைகிறாள் சகுந்தலை. அவளது வளர்ப்புத் தந்தையான கண்ணுவ முனிவர் அவள் செல்லவேண்டிய தூரம் குறுகட்டும் என்று இரக்கத்தோடு சொல்கிறார்.

புலவர் ம.வே.மகாலிங்க சிவம் அவர்கள் இதனை "அறு தொடர்க்கண் உகரபோல் உறுக தூரம்" என்று பாடுகிறார். இந்த உவமையை இலக்கணங் கற்றவர்களே இரசிக்க முடியும். விளங்கிக் கொள்ளமுடியும்.

ஆனால் இந்தப் பாடல் அடியின் அடிப்படையில் எழுதப்பட்ட "குற்றியலுகரத் தூரம்" என்ற கட்டுரையில் ஆசிரியர் முடிந்தவரை இலக்கணம் கற்பித்து வாசகரைத் தன்னோடு பயணிக்கச் செய்து அக்கட்டுரையை இரசிக்கச் செய்கிறார்.

"கனகி புராணம்" அழிந்து போனதற்குக் காரணம் இப்புராண ஆசிரியர் நட்டுவச் சுப்பையனார் பல பிரமுகர்களது பெயர்களைக் கனகியோடு சம்பந்தப் படுத்திப் பாடியதாக இருக்கலாம்.

"பிஞ்சுப் பழம்" என்ற கட்டுரை அளவில் மிகச் சிறியது. ஆனால் கருத்தில் உயர்ந்தது பிறப்பு இறப்பு சம்பந்தமான நுட்பமான கருத்தை மிகச் சிறப்பாக இவர் எழுதியுள்ளார்.

(தொடர்ச்சி 23 பக்கம்)

# 2019 ஜனாதிபதித் தேர்தலில் "கற்றுக்கொண்ட பாடம்"

***2019 ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களிடம் முன்வைக்கவென யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களால் தயாரிக்கப்பட்டு 5 தமிழ் தேசிய கட்சிகள் கைச்சாத்திட்டு ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கையளித்த பொது உடன்பாட்டு ஆவணத்தை ஏறெடுத்தும்பார்க்காத "கோத்தபாய ராஜபக்ச வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 2,77,019 வாக்குகளையும், இதனை நிராகரித்த சஜித் பிரேமதாச 12,45,456 வாக்குகளையும் இந்த பொதுஉடன்பாட்டு ஆவணத்தை திறந்துகூட பார்க்க மாட்டேன் எனக்கூறிய அநுர குமார திசாநாயக்க 13,494 வாக்குகளையும் பெற்ற நிலையில் பொது உடன்பாட்டு ஆவணத்தை ஏற்றுக்கொண்ட, தமிழ் வேட்பாளராக சுயேச்சையாக களமிறங்கிய சிவாஜிலிங்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெற்றுக்கொண்ட வாக்குகளோ 9,798 மட்டுமே"***

------------------------------------------------------------ - **கே. பாலா**




எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சிங்கள வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க, விஜேதாஸ ராஜபக்ச ஆகியோரில் ஒருவரை நிபந்தனைகளுடன் ஆதரிப்பதா அல்லது தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை போட்டியிடவைத்து சிங்கள வேட்பாளர்களுக்கு நெருக்கடி கொடுத்து அதன் மூலம் தமிழர் சார்ந்த விடயங்களை சாதிப்பதா என்பதில் தமிழ் தேசிய கட்சிகள் "திரிசங்கு" நிலையிலிருந்து இன்னும் வெளிவராத நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பு கற்றுக்கொண்ட பாடம் ஒன்றை நினைவு படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

கடந்த 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்ற குழப்ப நிலையில் இருந்த பிரதான தமிழ்தேசிய கட்சிகள், ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைக்கவென யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களால் ஒழுங்கமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பொது உடன்பாட்டு ஆவணத்தில் அந்த தமிழ் தேசியக்கட்சிகள் கைச்சாத்திட்டன. யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களால் ஒழுங்கமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பொது உடன்பாட்டு ஆவணம் மேலோட்டமாகப் பார்க்கையில் சிறந்ததொரு முயற்சியாகவே காணப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 பேர் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்ட போதும் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய சஜித் பிரேமதாசா, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய கோத்தபாய ராஜபக்ச, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய அநுர குமார திசாநாயக்க ஆகியோரே பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களாகஇருந்தனர். இந்த மூவருடன்தான் பிரதான தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களால் ஒழுங்கமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பொது உடன்பாட்டு ஆவணத்தை நிபந்தனையாக முன் வைத்து பேச்சுக்களை நடத்தி யார் அதனை ஏற்கின்றார்களோ அவர்களுக்கு ஆதரவளிப்பதென்ற முடிவை எடுத்தன.

இந்த பொது உடன்பாட்டு ஆவணத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் விக்னேஸ்வரன், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் சித்தார்த்தன் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகிய 5 தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டனர். பிரதான 5 தமிழ் கட்சிகள் இணங்கி கைச்சாத்திட்டுள்ள இந்த பொது உடன்பாட்டு ஆவணத்தில் இருந்த முக்கிய விடயங்களை பார்ப்போம்.

* புதிதாக உருவாக்கப்படும் அரசியலமைப்பில் ஒற்றையாட்சி முறைமையை நிராகரித்து தமிழ்த் தேசத்தை அங்கீகரித்து அதற்குத் தனித்துவமான இறைமை உண்டு என்பதையும் தமிழ் மக்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதையும் அங்கீகரித்து சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் இலங்கையின் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்.

* இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பவற்றுக்கு முழுமையான மற்றும் பக்கச்சார்பற்ற சர்வதேசப் பொறிமுறையிலான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சர்வதேச தீர்ப்பாயம் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

* பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

* தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும்.

* வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வதேசப் பொறிமுறையின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்.

* வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டிருக்கும் அரச படைகள் போருக்கு முன் தமிழ் மக்களின் பாவனையிலிருந்த தனியார் மற்றும் அரச காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு அக்காணிகள் அனைத்தும் உடனடியாக விடுவிக்கப்படுவதுடன், மீள்குடியமர்வு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல்வேண்டும்.

* வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அரச ஆதரவுடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சிங்களமயமாக்கல், பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

* வடக்குக்கு மகாவலி நதியை திசை திருப்புவது என்ற போர்வையில் வடக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கு மாத்திரமே திட்டமிட்டுச் செயற்படும் சபையாக மகாவலி அதிகார சபை இயங்குவதால் மகாவலி அதிகார சபையின் நியாயாதிக்கம் வடக்கில் இல்லாது ஒழிக்கப்படல்வேண்டும். அத்துடன், கிழக்கில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படல்வேண்டும்.

* அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மொரகஸ்கந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வன்னிப் பிரதேசத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும். சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல்வேண்டும்.

* தொல்லியல் திணைக்களம், வனவளத்திணைக்களம், வன உயிரினங்கள் திணைக்களம் உட்பட பல அரச திணைக்களங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் நில, வழிபாட்டுத்தல ஆக்கிரமிப்புகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல்வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் ஊடாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசிதழ் பிரகடனங்களிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்.

* போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தியையும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பையும் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு வெளிநாட்டு வாழ் இலங்கையர்களிடமிருந்து நேரடி முதலீடுகளை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இங்கு காணிகளையும் நிதிகளையும் கையாள்வதில் இப்போது அவர்கள் எதிர்கொள்ளும் சட்டப்பிரச்சினைகளை தீர்க்கவேண்டும்.

* வடக்கு - கிழக்குக்கான அரச மற்றும் தனியார் துறைகளின் வேலைவாய்ப்புக்களில் அந்தந்த மாகாணத்தைச் சார்ந்த மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படல்வேண்டும்.

* வடக்கு - கிழக்கை போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தி அதன் அபிவிருத்திக்கான நிதியைக் கையாள்வதற்கு வடக்கு - கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் நெறிப்படுத்தலில் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல் வேண்டும். மேற்சொன்ன கோரிக்கைகளில் உடனடியாக தீர்க்கப்படவேண்டிய விடயங்களுக்கு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து புதிய ஜனாதிபதி பதவியேற்று 3 மாதகாலப் பகுதிக்குள் தீர்வு காணப்படல்வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய 5 தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்கள் இணங்கி கைச்சாத்திட்ட இந்த பொது உடன்பாட்டு ஆவணத்தில் உள்ள விடயங்களில் ஒன்றைக்கூட சஜித் பிரேமதாசா, கோத்தபாய ராஜபக்ச, அநுர குமார திசாநாயக்க ஆகிய மூவரில் ஒருவரேனும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். என்பது நன்கு தெரிந்தே இந்த பொது உடன்பாட்டு ஆவணத்தில் தமிழ் தேசியக்கட்சிகள் கைச்சாத்திட்டன.

இங்குதான் சிக்கல் ஆரம்பமானது. பொது உடன்பாட்டு ஆவணத்தில் உள்ள விடயங்களை பிரதான மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களும் ஏற்றுக்கொள்ள மறுத்த நிலையில் இந்த ஜனாதிபதித்தேர்தலை குறிப்பிட்ட 5 பிரதான தமிழ் கட்சிகளும் புறக்கணித்திருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கான எமது கோரிக்கைகளை ஏற்காத இந்த மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடாது. எனவே இந்த் ஜனாதிபதித்தேர்தலை பகிஷ்கரியுங்கள் என இந்த 5 பிரதான தமிழ் கட்சிகளும் இணைந்து பகிரங்கமாக தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்க வேண்டும். இது தான் அவர்கள் செய்திருக்க வேண்டியது. ஆனால் நடந்தது என்ன?

இந்த 5 பிரதான தமிழ் அரசியல் கட்சிகளினாலும் ஜனாதிபதித் தேர்தலை பகி'கரிக்குமாறு தமிழ் மக்களைக் கோர முடியவில்லை. அதனால் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் இந்த தமிழ் தேசியக்கட்சிகள் மௌனமாக இருந்ததுடன் தேர்தலில் தமக்கு விருப்பமானவர்களுக்கும் வாக்களித்தனர், தமிழ் மக்களும் தமக்கு விருப்பமானவர்களுக்கு வாக்களித்தனர்.

இதில் தமிழ்மக்களின் பரம விரோதியான, தமிழினப் படுகொலையாளியான கோத்தபாய ராஜபக்ச 69,24,255 வாக்குகளைப்பெற்று வரலாற்று வெற்றியை பதிவு செய்தார். வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட சஜித் பிரேமதாச 55,64,239 வாக்குகளைப்பெற்ற அதேவேளை அநுரகுமார திசா நாயக்க 4,18,553 வாக்குகளைப்பெற்றார். 35 ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிட்ட இந்த தேர்தலில் தமிழ் வேட்பாளராக சுயேச்சையாக களமிறங்கிய எம்.கே. சிவாஜிலிங்கம் 11 ஆவது இடத்தைப்பெற்று 12,256 வாக்குகளைப்பெற்றார். யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களால் ஒழுங்கமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பொது உடன்பாட்டு ஆவணத்தை ஏற்றுக்கொண்ட ஒரேயொரு ஜனாதிபதி வேட்பாளராக சிவாஜிலிங்கம் மட்டுமே இருந்தார்.

அதுமட்டுமல்ல தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் கோத்தபாய ராஜபக்ச 1,35,058 வாக்குகளையும் சஜித் பிரேமதாச 2,59,673 வாக்குகளையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோத்தபாய ராஜபக்ச 38,460 வாக்குகளையும் சஜித் பிரேமதாச 2,38,649 வாக்குகளையும் திருகோணமலை மாவட்டத்தில் கோத்தபாய ராஜபக்ச 54,135 வாக்குகளையும் சஜித் பிரேமதாச 3,12,722 வாக்குகளையும் பெற்றனர்.

அதேபோன்று வடக்கு மாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் கோத்தபாய ராஜபக்ச 23,261 வாக்குகளையும் சஜித் பிரேமதாச 2,59,673 வாக்குகளையும் வவுனியா, முல்லைத்தீவு. மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி மாவட்டத்தில் கோத்தபாய ராஜபக்ச 26,105 வாக்குகளையும் சஜித் பிரேமதாச 1,74,739 வாக்குகளையும் பெற்றனர். ஒட்டு மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் கோத்தபாய ராஜபக்ச 2,27,653 வாக்குகளும் வடக்கு மாகாணத்தில் 49,366 வாக்குகளுமென 2,77019 வாக்குகளை பெற்றார். சஜித் பிரேமதாச ஒட்டு மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் 8,11,044 வாக்குகளும் வடக்கு மாகாணத்தில் 4,34,412 வாக்குகளுமென 12,45,456 வாக்குகளையும் பெற்றார்.

**(தொடர்ச்சி 23 பக்கம்)**

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI Pawn Brokers



30 வருட சேவைகள்



## வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கணகம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.™**

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2


416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198

# இலங்கையில் இரகசியமாக கருத்துக்கணிப்பு ஒன்றை சீனா நடத்தியுள்ளது அம்பலம்

- நடராசா லோகதயாளன்



உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த மாதம் 21ஆம் திகதி இலங்கையை வந்தடைந்த சீன துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழு ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என்பதை நேரடியாக கண்டறியும் நோக்கில் கருத்துக்கணிப்பு ஒன்றையும் இரகசியமான முறையில் செய்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த கருத்துக்கணிப்பின் தரவுகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடனான விசேட சந்திப்பின்போது சீன துணை அமைச்சர் சன் ஹையன் தெரியப்படுத்தியுள்ளார். இருவருக்கும் இடையிலான இந்த சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் வரை இடம்பெற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகமும் உறுதிப்படுத்தியது.

இலங்கையின் அரசியல் நிலவரங்கள் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்புகள் அதிகம் என்பன தொடர்பில் கொழும்பில் அமைந்துள்ள சீன இராஜதந்திர மையம் ஆய்வு அறிக்கைகளை ஏற்கனவே தயார் செய்து அதனை பெய்ஜிங்குக்கு அனுப்பியுள்ளது.

இவ்வாறு அனுப்பப்பட்ட அறிக்கையினை முழுமையாக அவதானத்திற்கு எடுத்துக்கொண்ட பின்னரே சீன துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழுவினர் கடந்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்தனர். அதன்போது, ஏற்கனவே கொழும்பு சீன இராஜதந்திர மையம் அனுப்பிய ஆய்வு அறிக்கைகளின் தகவல்களை நேரடியாக உறுதிப்படுத்திக்கொள்வதான திட்டமே இந்த பயணத்தை தீர்மானித்திருந்தனர்.

அதாவது இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்பு அதிகம் என்பதனை கண்டறிய, மக்களை நேரடியாக சந்தித்து கருத்துக்கணிப்பொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இத்தகைய நடவடிக்கைகள் பொதுவாக இராஜதந்திர அணுகு முறைகளுக்கு உட்பட்டதல்ல. ஆனாலும் அவ்வாறானதொரு கருத்துக்கணிப்பை மிகவும் இரகசியமாக முன்னெடுக்க தேவையான ஏற்பாடுகள் முற்கூட்டியே செய்யப்பட்டிருந்தது.

இதற்காக இலங்கையின் கம்பஹா மாவட்டத்தின் பியகம தேர்தல் தொகுதியை கொழும்பில் உள் சீன இராஜதந்திரிகள் மிகவும் இரகசியமாக தெரிவு செய்திருந்தனர். சீன துணை அமைச்சர் சன் ஹையன் தலைமையிலான குழுவினர் இலங்கை விஜயத்தின்போது, முதலாவதாக பியகம தேர்தல் தொகுதியில் வாக்காளர்களை சந்தித்து கருத்துக்கணிப்பையும் செய்துள்ளனர். இதன் பின்னரே நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இருதரப்பு சந்திப்புகளில் பங்கேற்றுள்ளனர்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியுடனான இருதரப்பு சந்திப்புக்கு அப்பால் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் சீன துணை அமைச்சர் சன் ஹையனுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது பியகம தேர்தல் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு தொடர்பில் சீன துணை அமைச்சர் சன் ஹையன், சஜித் பிரேமதாசவிடம் தகவல் கூறியுள்ளார்.

அதனை தொடர்ந்து இரு நாட்டு உறவுகள், இலங்கைக்கான சீன ஒத்துழைப்புகள், சீன வெளிவிவகார கொள்கைகள் மற்றும் தெற்கு ஆசிய பிராந்தியத்தின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இருவருக்கும் இடையில் பரந்துபட்ட பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் சுமார் 45 நிமிடங்கள் வரை கலந்துரையாடல் நீடித்ததாகவும் தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சீனா இரகசிய நகர்வு ஒன்றை மேற்கொண்டதா, இல்லையா என்பது தொடர்பில் இலங்கையின் இராஜதந்திர மட்டத்தில் மட்டுமன்றி அயல் நாடுகளின் புலனாய்வுப் பார்வையும் விரைவு படுத்தப்படுகின்றது. ஏனெனில் சீனா இவை அனைத்தையும் மேற்கொண்டு விட்டதன் பின்னரே கண்டுகொள்ளப்பட்டுள்ளதா அல்லது தெரிந்தும் மௌனம் காக்கப்பட்டதா என்ற சந்தேகமும் எழுவது மட்டுமன்றி இவ்வாறான ஓர் மிகப் பெரும் காரியத்தையும் அரசிற்கே தெரியாது நிறைவேற்றக்கூடிய வல்லமையில் சீனா வளர்ந்து விட்டதனையே இது எடுத்துக்காட்டுவது எதிர் காலத்தில் என்ன நிலைமையை தோற்றுவிக்கும் என்ற ஐயம் எழுப்பப்படுகின்றது.

(20 பக்கத் தொடர்ச்சி)

## இதைவிட இனியதும் உளதோ?

பின்னிணைப்பாக பல தகவல்களையும் சேர்த்திருக்கிறார். தனது தாய்க்கும் தமையனுக்கும் இந் நூலைச் சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

சராசரி வாசகருக்கும், அறிவு தேடும் வாசகருக்கும், பொழுது போக்கும் வாசகருக்கும், மீண்டும் நினைத்துப் பார்க்க விரும்பும் வாசகருக்கும், பாடசாலை மாணவர்க்கும் என பல தரப் பட்ட வாசகருக்கும் இன் சுவைத் தீனி கிட்டக் கூடிய வகையில் தனது எழுத்து நடையை அமைத்துள்ளன.

கட்டுரைகள் யாவும் சிறப்பாக அமைந்துள்ளன. இவற்றை பாடப் புத்தகங்களில் சேர்த்து அடுத்த தலைமுறையை தமிழ் தெரிந்த தலைமுறையாக, தமிழரின் பெருமை தெரிந்த தலைமுறையாக, தமிழன் என்று பெருமித உணர்வு கொள்ளக் கூடிய தலைமுறையாக வளர்க்கவேண்டியது தமிழர்கள் அனைவரதும் கடமையாகும்.

எல்லாக் கட்டுரைகளையும் தனித்தனியாக பாராட்டி எழுத இங்கு வாய்ப்பில்லை. பதச் சோறுகளாகச் சிலவற்றையே தொட்டுக் காட்டியுள்ளேன். "கபிலன் பாடினன் கொல்லோ" என்று ஔவையார் பாடியதுபோல நானும் "பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களே பாராட்டியிருக்கிறார்களே" என சொல்லி விட்டுவிடலாம் என்றே நினைக்கிறேன்.

எழுத்துப் பிழைகளைக் காண்பது மிக அரிது. அவ்வளவு கவனமாக அச்சுப் பதிவு செய்திருக்கிறார். அதற்குத் தனியான பாராட்டுக்கள். இலக்கண சுத்தமான சீர் பிரிப்புக்களோடு பாடல்கள் அச்சிடப் பெற்றுள்ளதைப் பார்த்து மகிழ்கிறேன். இது இவரது யாப்பிலக்கண அறிவைக் காட்டுகிறது.

அட்டையின் நிறத்திலும், படத்திலும்,பக்க வடிவமைப்பிலும் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். முன்னுரை, அணிந்துரை, முதற் கட்டுரை ஆகியவை இடப்பக்கத்தில் தொடங்குகின்றன. அவற்றை வலப் பக்கத்தில் தொடங்கியிருக்கலாம்.

வெளியீட்டாளர், அல்லது வெளியீட்டு நிறுவனம் பற்றிய தகவல்கள் இல்லை. விலை குறிப்பிடப் படவில்லை. விலைமதிக்கமுடியாத சொத்து என்று கருதினாரோ தெரியாது.

இந்த அரிய நூலை ஆக்கித் தந்த அனலை ஆறு. இராசேந்திரம் அவர்களை எவ்வளவுக்குப் பாராட்டினாலும் தகும். இந்நூலை அனைவரும் படித்துத் தமிழராய்த் தலை நிமிரவேண்டும்.

இன்னும் பல சிறந்த நூல்களை இவர் ஆக்கித்தரவேண்டும். அதற்குரிய உடல் உள நலத்தோடு இவரை எல்லாம் வல்ல இறைவன் வைத்திருக்கவேண்டும் என வேண்டி வாழ்த்தி அமைகின்றேன். நன்றி.

அகளங்கன்
90,திருநாவற் குளம்,
வவுனியா

(21 பக்கத் தொடர்ச்சி)

## 2019 ஜனாதிபதித் தேர்தலில் "கற்றுக்கொண்ட பாடம்"

கே. பாலா

இந்த பொதுஉடன்பாட்டு ஆவணத்தை திறந்துகூட பார்க்க மாட்டேன் எனக்கூறிய தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய அநுர குமார திசாநாயக்க வடக்கில் யாழ் மாவட்டத்தில் 1375 வாக்குகளும் வன்னிமாவட்டத்தில் 1156 வாக்குகளுமென 2531 வாக்குகளையும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2304 வாக்குகளும் அம்பாறை மாவட்டத்தில் 7460 வாக்குகளும் திருகோணமலை மாவட்டத்தில் 3730 வாக்குளையுமென 13494 வாக்குகளையும் பெற்று தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 13494 வாக்குகளைப்பெற்றார்.

இதில் இந்த பொது உடன்பாட்டை ஏற்றுக்கொண்ட சுயேச்சையாக களமிறங்கிய தமிழ் ஜனாதிபதி வேட்பாளரான சிவாஜிலிங்கம் வடக்கு மாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் 6,845 வாக்குகளையும் வன்னிமாவட்டத்தில் 1,295 வாக்குகளையும் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 369 வாக்குகளையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 800 வாக்குகளையும் திருகோணமலை மாவட்டத்தில் 489 வாக்களையும் மட்டுமே பெற்றிருந்தார். அதாவது கிழக்கு மாகாணத்தில் 1,658 வாக்குகளும் வடக்கு மாகாணத்தில் 8,140 வாக்குகளுமென வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 9,798 வாக்குகளையும் மிகுதி 2,458 வாக்குகளை ஏனைய மாகாணங்களிலும் பெற்றார்.

பொது உடன்பாட்டில் உள்ள விடயங்களை இந்த 3 பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் நிராகரித்த நிலையில் இவர்களுக்கு தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தளவு வாக்குகள் எவ்வாறு கிடைத்தன? தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிராகரித்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இவ்வாறு தமிழ் மக்களும் தமிழ் தேசிய கட்சிகளும் வாக்களித்ததால் இந்த பொது உடன்பாட்டை எட்டியதன் பலன் என்ன? தம்மால் பல சுற்று பேச்சுக்கள் நடத்தி இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் அதனை நிராகரித்த அந்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்களித்ததை விட இந்த பொது உடன்பாட்டை முன்வைக்காமலேயே அவர்களுக்கு ஆதரவளித்திருக்க முடியுமல்லவா?

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் தமிழ் தேசியக்கட்சிகள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும், குழப்பங்கள், ஒற்றுமையீனங்களுக்கு மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்பட்டால் 2019 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளராக சுயேட்சையாக களமிறங்கிய சிவாஜிலிங்கத்திற்கு ஏற்பட்ட கதிதான் இந்த தமிழ் பொது வேட்பாளருக்கும் ஏற்படும் இதன் மூலம் தமிழனின் இருப்பில் எஞ்சியிருந்த கோவணமும் அவிழ்ந்துவிடும். தமிழ் பொது வேட்பாளரை நிறுத்திய பின்னர் ஏனைய சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரும் ஒருவருக்கு இந்த தமிழ் தேசியக் கட்சிகளோ அல்லது தமிழ் மக்களோ ஆதரவளிப்பார்களேயானால், வாக்களிப்பார்களேயானால் அதனைவிட வேறு அவமானம், அடிமைத்தனம் இருக்க முடியாது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "ஊழி" திரைப்பட பாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது



"ஊழி" திரைப்பட பாடல் வெளியிட்டு வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு 08-05-2024 பிற்பகல் 4 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் குறித்த வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் வலிகளை சுமந்த குறித்த திரைப்படம் மே 10ம் திகதி 16 நாடுகளில் 70 திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.



கதை, திரைக்கதையுடன் ஜோசப் ரஞ்சித்தின் இயக்கத்தில் வெளியாகவுள்ள குறித்த திரைப்படத்தின் பாடல்களே வெளியீடு செய்யப்பட்டன.

ஈழத்து கவிஞர் தீபச்செல்வனின் கவி வரிகளில் உருவான பாடலுக்கு இந்திய பாடகர்களின் குரலிற்கு புதிய இசையமைப்பாளர் ரகுநந்தன் இசையமைத்துள்ளார்.

குறித்த பாடல் இறுவெட்டினை ஈழப்பாடகி பார்வதி சிவபாதம் மற்றும் ஈழ இசையமைப்பாளர் செயல்வீரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர்.

குறித்த நிகழ்வில், முன்னாள் வடமாகாண சபை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, முன்னாள் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், ஊழி திரைப்படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்த சட்டத்தரணி சுகாஸ், கலைஞர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஸ், பாடல் ஆசிரியர் தீபச்செல்வன் உள்ளிட்ட கலைஞர்கள் பலரும் அனுபவ உரையாற்றினர்.

# டுபாயில் இருந்து நாடுகடத்தப்பட்டார் "போதைப் பொருட்கள் கடத்தல் மன்னன்" மன்னா ரமேஷ்

இன்டர்போல் பொலிசாரால் சிவப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டு தேடப்பட்டு வந்த மன்னா ரமேஷ் டுபாயில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவனாகக் கருதப்படும் "மன்னா ரமேஷ்" எனப்படும் ரமேஷ் பிரியஜனக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட பொலிஸ் குழுவொன்று சந்தேக நபரை 07-05-2024 அன்று காலை டுபாயில் இருந்து நாட்டுக்கு அழைத்து வந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சர்வதேச பொலிஸாரால் சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த மன்னா ரமேஷ் அண்மையில் டுபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொலை, போதைப்பொருள் கடத்தல், கப்பம் பெறுதல் உள்ளிட்ட பல குற்றங்கள் மன்னா ரமேஷ் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அவிசாவளை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்களிடம் கப்பம் பெறும் சம்பவங்கள் தொடர்பில் சந்தேகநபருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அண்மைக்காலமாக சில கொலைகள் இவரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலோப்பளை அறத்திநகர் கடல்தொழிலாளர்கள் கோரிக்கை - இறங்குதுறை மற்றும் வீதி அமைக்கும் வகையில் திட்டம் தயாரிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு!



புலோப்பளை, அறத்திநகர் கடல்தொழிலாளர் சங்கத்தினரின் தொழில் நடவடிக்கைகளுக்காக இறங்குதுறை மற்றும் அதனோடு குறித்த இடத்திற்கு சொல்லும் வீதியையும் அமைக்கும் வகையிலான திட்டம் ஒன்றினை தயாரிக்குமாறு துறைசார் தரப்பினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கியுள்ளார்.

முன்பதாக முறையான இறங்குதுறை இல்லாமையால் நாளாந்தம் பல நெருக்கடிகளை எதிர்கொள்ளும் புலோப்பளை, அறத்திநகர் கடல்றொழிலாளர் சங்கத்தினரால் தமக்கான ஓர் இறங்குதுறையை அமைத்து தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

குறித்த கோரிக்கையின் பிரகாரம் அப்பகுதிக்கு நேரடி விஜயம் செய்த கடல்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடல்றொழிலாளர்களுடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள் தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

இந்நிலையில் அவர்களது வாழ்வாதார தேவையாக குறித்த கவனம் செலுத்திய அமைச்சர் இறங்குதுறை மற்றும் அதனோடு குறித்த இடத்திற்கு சொல்லும் வீதியையும் கட்டம் கட்டமாக அமைக்கக்கூடிய வகையில் திட்டம் ஒன்றினை துரிதமாக தயாரிக்குமாறு துறைசார் தரப்பினருக்கு பணிப்புரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்பதாக கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராம மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி தீர்வு காணும் நோக்கிலான மக்கள் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு மக்களுடன் கலந்துரையாடியுள்ளார். இதன்போது சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற கண்ணகைபுரம் கிராமத்தின் அடிப்படை மற்றும் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதியின் நிகழ்ச்சி திட்டத்திற்கு அமைவாக நாடு தளுவிய ரீதியில் விவசாயத்தை நவீனமயப்படுத்தி விவசாய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு மாவட்ட ரீதியில் ஓர் முன்மாதிரி கிராமத்தை தெரிவுசெய்யும் திட்டத்தில் ஊடக கிளிநொச்சியில் கண்ணகைபுரம் கிராமம் தெரிவாகி அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்ட விவசாய மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று சந்தித்து அவர்களது எதிர்பார்ப்புகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது முயற்சியின் பயனாகவே ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்ட காணிகளில் அப்பகுதியை சேர்த்த 146 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு காணிகள் பகிரந்தளிக்கப்பட்ட நிலையில் அவர்கள் விவசாய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இன் நிலையில் மேலும் 26 பயனாளிகள் தெரிவாகியுள்ளதோடு அவர்களுக்கும் விரைவில் காணிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த H N N வியாஸ்காந்த் தனது கிரிக்கெட் பயணத்தில் இன்னும் பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

## வடக்கு மாகாண ஆளுநர் வாழ்த்து






இந்தியன் ப்ரீமியர் லீக் (IPL) கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சன் ரைசஸ் ஹைதராபாத் அணிக்காக விளையாடியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர் விஜயகாந்த் வியாஸ்காந்திற்கு வடக்கு மாகாணம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வடக்கு மாகாணத்திலிருந்து தனது கிரிக்கெட் பயிற்சியை பெற்ற இவர் இலங்கைக்கு பெருமிதத்தை பெற்றுக்கொடுத்துள்ளதுடன், யாழ் மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பல்வேறுபட்ட சமூக சீர்கேடான செயற்பாடுகளில் கவனம் செலுத்தும் இளைய தலைமுறையினருக்கு, விளையாட்டின் மூலம் சாதனை படைக்கும் 22 வயதேயான வியாஸ்காந்த் ஒரு சிறந்த முன்னுதாரணமாவர். இவரை முன்மாதிரியாகக் கொண்டு எமது இளைஞர், யுவதிகள் விளையாட்டுகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. கற்றல் மூலம் மட்டுமல்ல விளையாட்டின் மூலமும் உயரங்களை எட்ட முடியும் என்பதை உணர்த்தியுள்ள விஜயகாந்த் வியாஸ்காந்திற்கு மீண்டும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றேன்.

திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,
கௌரவ ஆளுநர்,
வடக்கு மாகாணம்.

# ருவாண்டா (1994) ... இலங்கை (2009) ... காசா (2024) ...



**(இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனின் சிறப்புத் தொடர்)**

**(பகுதி - 5)**

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

எனது ஊடக வாழ்க்கையில் பல பிரபலங்களுடன் ஆழமாக உரையாடும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருந்தது. அது என்னவோ தெரியவில்லை, இயற்கையாகவே அந்த பிரபலத்தை ஒரு நேர்க்காணலுக்கு இணங்க வைக்கக்கூடிய ஒரு வாய்ஜாலம் எனக்கு உள்ளது என்று என்னை விமர்சனம் செய்பவர்கள் கூட கூறுவார்கள்.

அவ்வகையில் பல பிரபலங்களுடனான உரையாடல் தொழில்முறை ரீதியாக, ஊடகப்பணிக்கென்ற வறையரைக்குள்ள மட்டுமே இருக்கும், சில பேட்டிகள் அதையும் கடந்து தனிப்பட்ட முறையில் ஆத்மதிருபதியும், சந்தோஷத்தையும், என்றும் நிலைத்திருக்கக்கூடிய பசுமையான நினைவுகளையும் அளிக்கும். அதற்கு காரணம் அந்த நபர்களுடைய ஆளுமை, அவர்கள் சொல்லும் செய்தி, அது சமூகம் மற்றும் தனிப்பட்ட முறையில் ஏற்படுத்தும் தாக்கம் ஆகிவையும் அதற்கு முக்கிய காரணிகளாக இருக்கலாம்.

அப்படியான ஒரு பேட்டி தான் சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க பேராயர் கலாநிதி டெஸ்மண்ட் டூட்டு அவர்களுடையது,

அவரது ஆளுமை நெல்சன் மண்டேலாவின் ஆளுமைக்கு ஒப்பானது. சிலரோ பேராயரின் ஆளுமை மண்டேலாவின் ஆளுமையைவிட அதிகம் என்றும் கூற நான் கேள்விப்பட்டுள்ளேன். அவர் பொதுவாக ஊடகங்களிடம் பேசுவதிலை, ஏனென்றால் அப்படியான புகழ் வெளிச்சம் அவருக்கு தேவையில்லை. அரிதாக அவர் சில கருத்துக்களை சொல்வார். அவை மிகவும் ஆழம் பொதிந்ததாகவும், தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்.

சரி இந்த பீடிகை எதற்கு. காலஞ்சென்ற பேராயர் டூட்டுவை இப்போது ஏன் இந்த எழுத்தாளர் நினைவுகூர்கிறார் என்ற ஐயப்பாடு தோன்றுவது இயற்கையானது. அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. இலங்கையில் இறுதிகட்டப் போர் உச்சநிலையில் இருந்த போது, போர் நிறுத்தப்பட்டு இருதரப்பும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்று குரல்கொடுத்தவர்களில் பேராயரும் ஒருவர்.

உயிர் என்பது இறைவனின் பெருங்கொடை. அதை பறிக்க யாருக்கும் உரிமையில்லை என்பதை அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர். இலங்கையில் இறுதிகட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற மோசமான வன்செயல்கள், பாரிய மனித உரிமை மீறல்கள் குறித்து அவர் ஆழ்ந்த கவலை கொண்டிருந்தார். போர் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் அதற்கு தென் ஆப்ரிக்க அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறித்து வந்தார். அதன் காரணமாக தென் ஆப்ரிக்க அரசு இலங்கை விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தியது என்று கூட சொல்லலாம்.

அவ்வகையில் இலங்கையில் இரத்தக்களறியுடன் போர் முடிந்த நிலையில், பன்னாட்டளவில் "தி எல்டர்ஸ்" அதாவது மூத்தோர் என்ற அமைப்பின் தலைவராக இருந்த பேராயர் டெஸ்மண்ட் டூட்டு அறிக்கை ஒன்றி வெளியிடுவார் என்ற செய்தி ஒன்று கசிந்தது. அது அடுத்த ஓரிரு நாட்களில் வெளியாகக் கூடும் என்று கூறப்பட்டது. உடனடியாக மனதிற்குள் இருந்த செய்தி தேடலுக்கான அந்த உந்துதல் விழித்துக்கொண்டது.

நாம் ஏன் அதிகாரபூர்வமாக அந்த அறிக்கை வெளிவரும் வரை காத்திருக்க வேண்டும். அப்படி ஒரு அறிக்கை வெளிவந்த பிறகு அதை நாமும் செய்தியாக போடுவதில் என்ன சிறப்பு இருக்கப் போகிறது. நாமே அந்த செய்திக்கான மூலமாக இருக்கக்கூடாது என்ற எண்ணம் எழுந்தது. அதேவேளை வெறும் எண்ணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும் என்ற கவலையும் இருந்தது.

ஆசை இருக்கு ஆட்சி செய்ய ஆனால் அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க என்ற நினைவும் எனக்குள் வந்து சென்றது.

முதலில் அவரை தொடர்புகொள்ள வேண்டும். அவர் எங்கு இருக்கிறார் - லண்டனிலா அல்லது ஜொஹனஸ்பர்க்கிலா அல்லது உலகின் வேறு ஏதாவது பகுதியிலா? அதை தேடி கண்டுபிடிப்பதற்கே ஒரு நாளாகிவிடும். பிறகு அவரிடம் பேச வேண்டும். பேச வேண்டும் என்றால் - அவர் என்னுடன் பேச வேண்டுமே. சரி, பேராயர் இருக்கும் இடத்தை அறிந்தாலும் அவரிடம் நமது தேவையை எடுத்துச் சொல்லி பேட்டிக்கு நேரம் கேட்க வேண்டும். அவர் அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு உரையாட ஒப்புக்கொள்ள வேண்டும். நேரில் வாருங்கள் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது. இப்படி ஒன்று இரண்டல்ல பல கேள்விகள்.

இதனிடையே 19 மே 2009 அன்று மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார் என்ற தகவல் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. கடந்த இரண்டு நாட்கள் போலவே அன்று விரைவாக அலுவலகம் சென்றேன். வழக்கம் போன்று "மணியான தலைவர்" உட்பட "மூத்த செய்தியாளர்கள்" அந்த சமயத்தில் வந்திருக்கவில்லை. சகோதர சேவையான சிங்கள மொழி ஒலிபரப்பான சந்தேஷ்யவில் தமிழர்கள் மீது பற்றுகொண்டிருந்த தயாரிப்பாளர் வந்திருந்தார். நாங்கள் இருவரும் தேநீர் தயாரித்துக்கொண்டு எமது இருக்கைகளில் வந்து அமர்ந்து, மஹிந்த என்ன பேசுகிறார் என்பதை கவனிக்க ஆரம்பித்தோம்.

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தமிழர்களுக்கு எதிரான யுத்தம் அல்ல. எமது நோக்கமானது தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதேயாகும். தமிழ் மக்களை பாதுகாக்க வீரதீரமான எமது படைகள் தமது உயிர்களை தியாகம் செய்துள்ளனர். இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களை பாதுகாப்பு எனது பொறுப்பாகும். அது எனது கடமையும் கூட. இந்த நாட்டிலுள்ள அனைவரும் பாதுகாப்பாக அச்சம் மற்றும் சந்தேகத்திற்கு இடமின்றி வாழ வேண்டும். அனைவரும் சமமான உரிமைகளுடன் வாழ வேண்டும். அதுவே எனது இலட்சியம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்புவோம்".

மஹிந்த தனது நாடாளுமன்ற உரையின் முதல் பத்தியை வாசித்து முடித்த பிறகு நானும் சந்தேஷ்யவிலிருந்து எனது நண்பரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். இருவர் மனதிலும் ஒரே மாதிரியான எண்ணம் எழுந்தது.



"மச்சான் என்ன ஆச்சு மஹிந்தவிற்கு. தமிழர்கள் மீது திடீரென்று பற்றும் பாசமும்"?

தமிழ் மக்கள் மீது அவருக்கு இந்தளவிற்கு பற்றும் பாசமும் இருந்தால், ஒரு கட்டத்தில் போரை நிறுத்தி, உயிரிழப்புகளை தடுத்திருக்கலாமே, சம உரிமை பற்றும் பேசும் அவர் அதை அளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தால் கூட போர் நிறுத்தம் ஏற்பட்டு பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பித்து ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கலாமே, போர் முடிந்த பிறகு முதலைக் கண்ணீர் வடிக்கிறாரே என்று நான் கேட்க, எதிர் மேசையில் இருந்த நண்பரோ, "மச்சான் இது சும்மா சரவ்தேச சமூகத்திற்கு பேக்காட்டுவதற்கான ஆடும் நாடகம்" என்று கூறியதோடு மட்டுமில்லாமால், "மச்சான் நீ சும்மா மஹிந்தவுக்கு ஒரு அழைப்பெடுத்து பேசு" என்று என்னை கிண்டல் செய்துவிட்டு மேலும் அவர் பேசுவதை அவதானிப்பதை தொடர்ந்தோம்.

"நீங்கள் அனைவரும் அறிந்துள்ளபடி எமது தாய் நாடு பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளது. இப்போது முதல் இந்த நாட்டில் இறையாண்மை கொண்ட நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் மட்டுமே நாட்டின் ஒவ்வொரு அங்குலத்திலும் நடைமுறையில் இருக்கும்" என்று முழங்கினார்.

அத்தோடு நிறுத்தாமல் "இந்த நாட்டில் அனைவரும் ஒரே தாயின் பிள்ளைகளாக, இன, மத, சாதி பாகுபாடின்றி வாழ வேண்டும். நமது நாட்டின் விடுதலையே அனைத்திலும் முக்கியமானது. நான் ஒரு போதும் பிரிவினை வாதத்தை அனுமதிக்கமாட்டேன், நாட்டில் ஜனநாயகத்தை அழிக்க ஒருவரையும் அனுமதிக்க மாட்டேன். அனைத்து இன, மத அடையாளங்களை நான் மதிப்பேன், யார் மீதும் பலப்பிரயோகம் செய்யப்போவதில்லை, அனைவரையும் உள்ளடக்கி ஒரு புதிய சமுதாயத்தை கட்டியெழுப்பி அனைவரின் சமூக உரிமைகளையும் பாதுகாப்பேன், அதுவே எனது மஹிந்த சிந்தனையின் நோக்கமாகும்".

"மச்சான் எப்படி மஹிந்த நடிப்பு. எங்கட மஹிந்த முன்னால் உங்கட சிவாஜி எல்லாம் ஒன்றும் இல்லை" என்று சந்தேஷ்ய நண்பர் கூறிவிட்டு, தமிழர்களும் மஹிந்தவும் ஒரே மாதிரியே சந்திக்கின்றனர் என்றார்.

"உனக்கு என்ன விசர் பிடித்திருக்கா?" என்று நான் கூற அவரோ அமைதியாக "பொறு மச்சான். மஹிந்த என்ன சொல்கிறார். நாட்டின் விடுதலையே அனைத்திலும் முக்கியமானது. அதைத் தானே தமிழ் மக்களும் சொல்கிறார்கள்" என்றார்.

இதனிடையே அன்று மதியம் மற்றும் மாலை நேர பிபிசியின் உலக தொலைக்காட்சி ஒலிபரப்பில் பங்கேற்க மத்திய செய்தியறையிலிருந்து அழைப்பும் வந்தது. போர் முடிந்துவிட்டதாக மஹிந்த நாடாளுமன்றத்தில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ள நிலையில், அடுத்து நாட்டில் என்ன, இந்தியா இந்த விடயத்தை எப்படிப் பார்க்கும், உலகெங்கும் பரந்துவிரிந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைப்பாடு மற்றும் எண்ணம் என்ன? மஹிந்த இன்றைய உரையில் கூறியதை நடைமுறைபடுத்துவாரா போன்ற பல வி'யங்களை விவாதிக்கலாம் என்று கூறினர். சரி என்று கூறிவிட்டு மற்ற செய்திகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தோம்.

இதனிடையே வன்னியில் தொடர்ந்து ஆங்காங்கே குண்டுச் சத்தம் கேட்பதாகவும் தகவல் வந்தது. போரின் கொடூரம் காரணமாகவும், வகைதொகையின்றி நிலம் மற்றும் வான்வழி தாக்குதலில் காயமடைந்த ஆயிரக்கணக்கானவர்கள் வட்டுவாகல் பாலத்தை கடந்து வந்தவண்ணம் இருந்தனர். சிறு பிள்ளைகளை இடுப்பிலும், கைகளிலும், தலையிலும் அமர வைத்துக்கொண்டு, மாற்று உடுப்புக்கூட வழியில்லாமல் ஒரு சிறு பையில் இருந்ததை அள்ளிப்போட்டுக்கொண்டு, இளைஞர்கள், யுவதிகள், வயதானவர்கள், தள்ளாடியேனும் நடக்க முடிந்தவர்கள், கணவரையும் மகனையும் பறிகொடுத்த மூதாட்டிகள் என மக்கள் வன்னி பெருநிலப்பரப்பை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அவர்களிடம் பேசுவதற்கு கூட மனது இடம்கொடுக்கவில்லை.

நாடு முழுவதும் விடுவிக்கப்பட்டுவிட்டது என்று மஹிந்த நாடாளுமன்றத்தில் முழங்கினாலும், தமிழ் மக்களுக்கு அந்த விடுதலை என்பது சிந்தனையிலும் இல்லை. அவர்கள் நடைபிணமாக அடுத்து என்ன என்பது தெரியாமல் இலக்கற்ற பயணம் ஒன்றை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். அவர்களின் சுமை தாங்காமல் வட்டுவாகல் பாலம் திணறிக் கொண்டிருந்தது. ெ'ல் தாக்குதல், துப்பாக்கிச் சூடு, எறிகணை வீச்சு, கொத்தணி குண்டுகள் ஆகியவற்றிலிருந்து தப்பித்தவர்கள் அல்லது குற்றுயிரும் கொலையுருமாக இருந்தவர்கள் அந்த பாலத்தின் மீது நடந்து வரும் போது, பாலம் பாரம் தாங்காமல் இடிந்து விழுந்து அந்த மக்களும் நந்திக்கடல் ஏரியில் விழுந்துவிடுவார்களோ என்ன அச்சமும் மேலோங்கிக் கொண்டிருந்தது.

இதனிடையே ஓரிருவருடன் பேசக் கூடிய வாய்ப்பு கிடைத்ததாக எமது வடக்கு இலங்கைச் செய்தியாளர் மாணிக்கவாசகம் கூறினார். அவர் கூறிய பல விஷயங்கள் நெஞ்சை உலுக்குவதாகவும், கேட்டாலே மரண பயத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இருந்தன.

"ஐயா, இந்த மக்கள் முள்ளிவாய்க்கால் பகுதியிலேயே செத்திருக்கலாம். அதில் அவர்களுக்கு ஒரு நிம்மதியாவது இருந்திருக்கும். இறந்த தமது உறவினர்கள், உடமைகள், ரத்தம் தோய்ந்த நினைவுகள் ஆகியவற்றை பின்னுக்கு விட்டு, உடலில் உயிரின்றி இந்தப் பகுதிக்கு வருகிறார்கள். சிலர் அங்கிருந்து ரத்தம் தோய்ந்த ஒரு பிடி மண்ணை தமது பைகளில் எடுத்து வருகிறார்கள்".

சிவந்த மண்ணாகிப் போன முள்ளிவாய்க்காலை விட்டு, இலக்கற்ற ஒரு பயணத்தை அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.


சரி பேராயர் டெஸ்மண்ட் டூட்டு என்ன சொன்னார்... அடுத்த வாரம்...



**(தொடரும்...)**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1099

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

### கொக்குவில், யாழ்ப்பாணம்

திருமுருக கிருபானந்தவாரியார்சுவாமிகள் பிரசங்கம் செய்யும்பொழுது, “இக்கோயிலுக்கு அவசியம் ஒரு கோபுரம் அமைதல் வேண்டும்” எனப் பலமுறை கூறிவந்தார். அப்பொழுது சுவாமிகள் ச.வே.சண்முகம்பிள்ளை அவர்களையும், குமாரசாமிப்புலவர் அவர்களையும் அழைத்து” இக்கோயிலுக்கு கோபுரம் அமைப்பதற்கு நீங்கள் முயற்சித்தால் என்ன? எனக் கேட்டுள்ளார். அப்பொழுது அவர்கள் “திருவருட் சம்மதம் எப்படி இருக்குமோ அப்படி நடைபெறும்” என்று விடைகூறினர்.

பெரியோர்வாக்கு இறைவாக்கிற்குச் சமமானது என்பதற்கிணங்க, விரைவிலேயே மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கான கோபுரவேலைகள் திரு.ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களாலும், அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டது. இராஜகோபுரவேலைகளை, அராலி தெற்குவாசியான நாகமுத்து ஸ்தபதியார் குழுவினர் சிறப்பாக நிறைவேற்றினர். அத்தோடு இராஜகோபுரத்திற்கு முன்பாக மணிமண்டபமும் அமைக்கப்பட்டு, மஞ்சவனப்பதி தேவஸ்தானத்திற்கு அழகையும், ஊர்மக்களுக்கு அருளையும் அள்ளிக்கொடுத்தது.

மஞ்சவனப்பதிக்கு இராஜகோபுரம் அமைக்கப்படவேண்டும் என்பதில் மிக்க ஆர்வம்கொண்ட திருமுருககிருபானந்த வாரியார் சுவாமிகள், மஞ்சவனப்பதிமுருகன்மீது அளவற்ற பற்றும், பக்தியும் கொண்டவர். இவர் தனது கைப்பட எழுதிய நூலில் இதுபற்றி அழகாகக் குறிப்பிட்டுள்ளார். “நான் அனேகநாட்கள் பிரசங்கம் செய்த தேவஸ்தானம் ஒன்று உண்டெனில் அது யாழ்ப்பாணம் கொக்குவில் மஞ்சவனப்பதியேயாகும்” எனக் கூறியுள்ளார்.

இவ்வாலய கும்பாபிஷேகத்திற்கு வருவேன் எனக் கூறிச் சென்றவர், கும்பாபிஷேகம் நடைபெற்றபொழுது இறைவனடி சேர்ந்துவிட்டார். ஆயினும் அவரது திருவுருவத்தை வரைந்து அவரது ஆவலை நிறைவு செய்துள்ளார்கள். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுடைய அருளுரைகளைக் கேட்ட அன்பர்கள், ஆலய முன்னேற்றத்திலே அதிக சிரத்தை காட்ட ஆரம்பித்தனர்.

கொக்குவில் மஞ்சவனபதி ஆலய வரலாற்றில் 1959 ஆம் அண்டு குறிப்பிடத்தக்க மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்திய காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இவ்வாண்டிலேயே திரு.ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்டு ஐந்துபேர் கொண்ட தர்மகர்த்தாசபை அமைக்கப்பட்டது. இச்சபை ஆலய முன்னேற்றத்தில் ஆர்வங் கொண்டு உழைத்து, பல்வேறு பணிகளைச் செய்துள்ளது.

இவ்வாறு வளர்ச்சியடைந்த ஆலயத்தின் தேவைகளுக்கு மலர் பறிப்பதற்கு, நந்தவனம் ஒன்று தேவை என்பதை முருகன் அடியார்கள் உணர்ந்தனர். ஆலயத்திலே நந்தவனம் அமைத்து, பூசைக்கு மலர் பறித்துக்கொடுத்தலாகிய திருத்தொண்டு செய்வது, சரியை மார்க்கத்தில் சிறந்ததென்பதை புராண வரலாறுகளும், நாயன்மார்களின் திருத்தொண்டுகளும் உணர்த்தியுள்ளன. இதனை மனதிற்கொண்டு திரு. கா.சி.நடராசா அவர்கள், ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக நந்தவனம் அமைக்கும் வேலையை ஆரம்பித்து வைத்தார். இவரைத் தொடர்ந்து திரு.சு.நமசிவாயம் அவர்கள், பொதுமக்களிடம் நிதி திரட்டி நந்தவனத் திருப்பணியை நிறைவேற்றி வைத்தார்.

1964 ஆம் ஆண்டு, பதின்னான்கு பேர் கொண்ட திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு, திருப்பணிவேலைகள் பல சிறப்பாக நடைபெற்றன. 1965 ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ செல்லத்துரை குருக்கள், மங்களம்மா ஆகியோரது பேரன் பிரம்மஸ்ரீ வை.சுப்பிரமணியக் குருக்கள், குருப்பட்டம் தரித்து நித்திய நைமித்திய பூசைகளைச் செய்து வந்தார்.

1966 ஆம் ஆண்டு இவ்வாலயத்திலே பல்வேறு திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாண்டு பாலஸ்தாபனம் நடைபெற்று கருவறையும், சண்டேசுவரர் சந்நிதானத்தையும் தவிர, ஏனைய பரிவார மூர்த்திகளது சந்நிதானங்களும், ஏனைய மண்டபங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டது. இவ்வாறான புனரமைப்புவேலைகள் இடம்பெற்று, 1968 ஆம் ஆண்டு புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம், மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இக் கும்பாபிஷேகம், நல்லூர் சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களை பிரதமகுருவாகக்கொண்டு, பல சிவாச்சாரியார்களினது உதவியோடு மிகச் சிறப்பாக நிறைவுபெற்றது. இதுமுதல் மண்டலாபிஷேகப்பூர்த்திவரை அருணகிரிநாதர் மடத்தில், தினமும் மகேஸ்வரபூசையும் இடம்பெற்றது. 1968 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே திருமதி. செல்லத்துரை பவளம் அவர்களும், திரு. கந்தப்பிள்ளை சிவராசா அவர்களும், அழகிய காண்டாமணியொன்றினை அன்பளிப்புச் செய்தனர்.

1971 ஆம் ஆண்டு, மீண்டும் பதினொருபேர் கொண்ட தர்மகர்த்தாசபை தெரிவு செய்யப்பட்டது. இச் சபையின் தலைவராக சமாதானநீதவானாக விளங்கிய திரு. த.நீதிராசா அவர்களும், செயலாளராக வைத்தியகலாநிதி திரு. இ.அருட்பிரகாசம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்காலப்பகுதியில் விநாயகருக்குரிய கட்டுத்தேர் பழுதடைந்து காணப்பட்டது. எனவே விநாயகருக்கு புதியதேர் ஒன்றினைச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சமாதானநீதவான் திரு. த.நீதிராசா அவாகளது தலைமையில், தம்பு குடும்பத்தினரது உபயமாக 1975 ஆம் ஆண்டு புதிய செய்கைத்தேர் உருவாக்கப்பட்டது. இத்தேரினை யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் திரு. ஆறுமுகம் சிவரத்தினம் ஸ்தபதியார் குமுவினர் உருவாக்கினர். இவ்வாண்டிலேயே மணிக்கூட்டுக்கோபுரத் திருப்பணிச்சபை அமைக்கப்பட்டு, திருப்பணிவேலைகள் நிறைவேற்றப்பட்டது.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் மீது கொண்ட பக்தியினாலும், அவன் அருளைப்பெற்ற அன்பர்களின் முயற்சியினாலும், ஒவ்வொரு கால கட்டத்திலும் இவ்வாலயத் திருப்பணிகள் சிறப்பாக இடம்பெற்றன. 1981 ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை, இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய பூசைகளைக் கவனிக்கும்பொருட்டும், நிறைவுபெறாதிருந்த திருப்பணிவேலைகளை நிறைவேற்றும்பொருட்டும், பதினைந்துபேர்கொண்ட நித்திய பரிபாலனக்குழுவொன்றை நியமித்தது.

***வளரும்...***

# அரசியல் நேர்மை மிக்கவரான ஈழவேந்தன் அவர்களின் அனுபவத்தையும் அறிவையும் எமது அடுத்த தலைமுறைக்கு கடத்த நாம் தவறிவிட்டோம்”

## கனடாவில் அவரது இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி கவலை தெரிவிப்பு











எங்கள் மத்தியில் வாழ்ந்த அல்லது வாழ்ந்து மடிந்த தமிழ் அரசியல்வாதிகளில்அரசியல் நேர்மை மிக்கவராகவும் மூளை முழுவதும் தமிழ் மக்கள் தொடர்பானதும் தமிழ் மொழி தொடர்பானதுமான தகவல்களை நிறைத்து வைத்திருந்த அமரர் ஈழவேந்தன் அவர்களின் அனுபவத்தையும் அறிவையும் எமது அடுத்த தலைமுறைக்கு கடத்த நாம் தவறிவிட்டோம்.”

இவ்வாறு கடந்த 4ம் திகதி கனடாவில் நடைபெற்ற அவரது இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி கவலைடன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

”மிகவும் துல்லியமான நினைவாற்றலும் நேர்மையும் கொண்டவராக விளங்கிய அவரை நான் பல தடவைகள் கனடிய அரசியல்வாதிகளுக்கு அறிமுகம் செய்து வைத்து அதனால் எனக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர். இவ்வாறான ஒரு ஆற்றலும் ஆங்கில அறிவும் மிகுந்த அரசியல்வாதி ஒருவர் உங்கள் மத்தியில் வாழ்வது உங்கள் இனத்திற்கு ஒரு பலம் என்று அந்த கனடிய அரசியல்வாதிகள் தெரிவித்தார்கள்.

மறைந்த ஈழவேந்தன் அவர்கள் தனது உடலை விட்டு உயிர்பிரியும் வரையும் தமிழ் மொழிக்காகவும் தமிழினத்திற்காகவுமே வாழ்ந்தார் என்பது உண்மையே”

என்றார் எம்பிபி லோகன் கணபதி அவர்கள்.

அங்கு பலர் உரையாற்றினார்கள். திருமதி (டாக்டர்) லோகன் கணபதி மற்றும் “உலகத் தமிழர்“ பத்திரிகையின் ஆசிரியர் கமல் நவரட்ணம் உட்பட பல முக்கிய பிரமுகர்களின் அஞ்சலி உரைகள் அங்கு இடம்பெற்றன.



## கடந்தவையும் கடப்பவையும் - (97)

நகைத்தலும் நாலுகதை நக்கலாய் கதைத்தலும் - அப்பப்போ
முறைத்தலும் தேவைவர தக்கதை உரைத்தலும்

இடமறிந்து மரியாதை கொடுத்தலும் மதித்தலும்
மடமையெனில் உருமையோடு கடிதலும் வெறுத்தலும் கூட

நட்புக்களில் எப்பொழுதும் நடப்பதுதான் - பல்கலையில்
உட்புகுந்த அப்பொழுதிருந்து இப்படித்தான் சிலநட்பு - ஆனாலும்

போர்க்கால பெரும் இடப்பெயர்வு மாற்றியது பலரை
யார்க்கும் உதவும் தீவிர மனப்போக்கு உடையவராய் - அன்று

அரைவட்டம் அடித்துநின்ற நட்பும் கூட அப்படித்தான் - முன்னைய
மனவோட்ட கருத்தினை முழுத்துமாய் மாற்றி

வெம்மையின் தன்மையால் தன்னியல்பு மாறிநின்ற
அந்நிலத்தில் எங்களோடு கூடவந்து

அந்விடத்து மக்கள் கூரைக்காய் வேயும் - நாம்
எம்இடத்தில் கண்டிராத சிரைக்காத புற்கற்றை

சிரமம் பாராது எடுத்துவந்து புதிதாக வீடமைக்க - மற்றும்
ஓரமாய் கிணறு இடிக்க உதவியதை மறக்கேலாது

அங்கு

தோப்பிலே ஒரு பகுதி தனித்துருக்கு
பார்ப்பதற்கு அழகான இடமாக

சிறிதுநாள் இருப்பதற்கு சிறியதாய் ஒருவீடு
பெரியவரும் சிறியவரும் சேர்த்தமைத்தோம்

பெரியளவில் மறைப்புக்கள் ஏதுமில்லை
அருகினில் அவசரக் கிணறும் ஒன்று - கொஞ்சம்

ஆழமாய் அகழும்போதே அதிகநீர் கிடைத்ததங்கு - வெள்ளை
கூழாக தண்ணிவரும் தொடர்ந்து நீர் அள்ளுகையில்,

பொறுத்திருந்து நீர்தெளிய பொறுமையாக கிளித்த - அந்த
நிலத்து வாழ்கை ஒருநாளும் நினைக்காத வாழ்க்கையது

உண்ணலும் உறங்கலும் கழித்தலும் கூட
விண்பார்க்க நடந்தாலும் மகிழ்வான சூழல்தான்

வீட்டுக்கு ஒருபக்கம் ஆங்காங்கு இருந்தன
கூட்டாக சிறுமுட் பற்றைகள் ஆனாலும்

ஒருநாளும் வரவில்லை சிறிதாகவேனும்
கொலை எண்ணம் கொண்ட ஒரு ஜந்தும்

வெள்ளை மனம் கொண்ட மக்களோடும் மாக்களோடும்
கொள்ளை அன்பு கொண்டபோதும்

ஒருமாதம் கூட முழுமையாய் கழியவில்லை
யாரும் எதிர்பாரா போர்நிறுத்தம் ஒன்றுவர

பாதையும் திறந்ததாக அறியவர நாங்கள்
போவதும் உறுதியாச்சு கண்டிக்கு .........

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --





TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி மாதவிடதய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Head-aches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5




ௐ
OM NAMO NARAYANA


125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்
N. P. ராஜசேகர்
Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278
அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு, புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது தீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்றியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்


## 10-05-2024 வெள்ளி தொடக்கம் 16-05-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். நண்பகலில் நல்ல தகவல் வரும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். உடல்பொலிவு கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். திருமணம் கைக்கூடி வரும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. முன்கோபத்தை குறைக்க வேண்டும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நீண்ட நாளைய நோய் விலகும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். வெளிவட்டார பழக்க வழக்கங்கள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். உல்லாசப் பயணம் இனிக்கும். சுதந்திரமாக செயல்படும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்கள் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். கர்ம வினைகள் அகலும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,1,3,9

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,U




**ரிஷபம்:** சாமார்த்தியமாக செயல்படும் வாரம். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்க்கைத் தரம் உயரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். கிருபைகள் சேரும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கருத்து வேறுபாடுகள் விலகும். பகைவர் பணிந்து நிற்பர். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. புதுமையை விரும்புவீர்கள். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. வீண் வம்பு விலகும். ஆபரணத்தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். இனிய தகவல் உண்டு. வீண் வம்பு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டதேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,3

அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,X




**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி கிட்டும் வாரம். எண்ணங்கள் பலிதமாகும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. விவேகம் கைக்கொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். திருஷ்டிகள் விலகும். உடல்சோர்வு ஏற்படும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்திகள் தேடி வரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உற்சாகம் மேலோங்கும். தொழில்போட்டி மறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். மனக்கட்டுப்பாடு அவசியம். பயணங்களால் அனுகூலம் உண்டு. பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். வம்புதும்புகள் ஒழியும். அடுத்தவர் தலையீடு அமைதியைக் கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். போதாத காலம் விலகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,U




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். பயணம் அனுகூலம் தரும். பாராட்டுக்கள் உயரும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறைத் தேவை. இசை ஆர்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை அணிகலன் சேரும். வயிறு உபாதைகள் வந்து போகும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். காரியங்கள் கை கூடும். வார்த்தைகளில் கவனம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். கருத்து வேறுபாடுகள் விலகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். விவசாயம் லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் வரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஆக்கப்பூர்வமான காலம். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். உயர் பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெற்றோர்களால் பெருமை சேரும். ஆடம்பர அகங்கள் கூடும். வழக்குகள் தள்ளிப்போகும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். தனச் சேர்க்கையுண்டு. புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச்செலவு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,4,3

அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,I



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன்சுமை குறையும். தாய்வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். பேச்சில் நிதானம் தேவை. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வெகுமானம் கிடைக்கக்கூடிய காலம். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். அவமானங்கள் அகலும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பதவி உயர்வு கிட்டும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழி ஆதாயம் உண்டு. தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பூமியால் லாபம் உண்டு. கலவரமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கைப் பிடிப்பு ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் இரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்ரஹ விநாயகர், அதிர்ஷ்ட எண்: 3,5,9,1

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,O




**கன்னி:** எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும் வாரம். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. செயல்பாட்டில் தீவிரம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். பாராட்டுக்கள் கூடும். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் பெருகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பணவரவு சுமாராக இருக்கும். உபயோகமான காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,9,4,1


அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,E




**துலாம்:** ஆடம்பர செலவு அதிகரிக்கும் வாரம். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வியாபாரம் வெற்றித்தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு உயரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பணவரவு சுமாராக இருக்கும். பால் தானம் செய்வதால் பாவங்கள் விலகும். வம்பு தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிள்ளைகளின் தொல்லை அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு குறையும். மனநிம்மதி அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டு பயணம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொலைதூரப் பயணம் ஏற்படும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். தொட்டது துலங்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கல்விச்செலவு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,G




**விருச்சிகம்:** மனக்கசப்பு நீங்கும் வாரம். பதவி உயர்வு கிட்டும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். ஏற்றமான தருணம். தொழில் அபிவிருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்மந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கி வசூலாகும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் ஏற்றம் கிடைக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். தனவரவுகள் பெருகும். நிர்வாக பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும.

***(தொடர்ச்சி 29 பக்கம்)***

# மே 18 தமிழ் இனப்படுகொலை நினைவேந்துவதற்கு இமாலய துரோகிகளுக்கு உரிமை இல்லை

## காணாமல் போன தமிழ் பிள்ளைகளின் வவுனியா தாய்மார்கள்


மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் இமாலய துரோகிகளுக்கு உரிமையில்லை!

தமிழர் தாயக சங்க செயலாளர் ராஜ்குமார் காட்டம்

மே 18 தமிழர் இனப்படுகொலையின் நினைவு நாளில் நினைவேந்துவதற்கு இமாலயத் துரோகிகளுக்கு உரிமை யில்லை. காணாமலாக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும் எதிர்கால இனப்படுகொலையிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றவும் தமிழ் இறையாண்மையை நிலைநாட்டுவதற்காக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் (02 ஆம் பக்கம் பார்க்க)

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் எமது தொடர் போராட்டத்தின் 2635வது நாள், மே 8,2024, வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக, ஏ-9 வீதியில் உள்ள இந்த பந்தலில் எமது பயணம் தொடர்கிறது.

காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் என்ற வகையில் தமிழ் துணை இராணுவக் குழுக்கள், புலம்பெயர் குழுக்களான GTF, CTC, சுரேன் சுரேந்திரன் , திரு, திருமதி. ஜெயராஜா (NCFP) மற்றும் டான்டன் துரைராஜா (CTC) ஆகியோரை முள்ளியவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எந்தவொரு தார்மீக அதிகாரத்தையும் கோருவதைத் தவிர்க்குமாறு வலியுறுத்துகிறோம்.

முழு இறையாண்மையுடன் ஒரு ஜனநாயக தமிழ் தேசத்தில் தமிழ் குழந்தைகளும் பெற்றோர்களும் சுதந்திரமாக வாழக்கூடிய எதிர்காலத்திற்காக எமது துணிச்சலான உள்ளங்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். இது தான் முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாகும்.

GTF (உலக தமிழ் பேரவை), CTC (கனடியன் தமிழ் காங்கிரஸ்), எலியாஸ் ஜெயராஜா மற்றும் அவரது மனைவி சாந்தி ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்து கண்டியில் உள்ள புத்த பிக்குகளின் கால்களைத் தொட்டு வீழ்ந்து கும்பிட்ட பின்னர், தமிழ் இன படுகொலைகளுக்கு காரணமானவர்களிடம் ராஜபக்ச உள்பட பலருக்கு பணிந்து நடந்து கொண்டனர்.

இது தாயகத்தில் தமிழர்களை அவமரியாதை செய்யும் செயலாகும். மேலும், இந்த நபர்கள் ஒரு "இமாலய ஒப்பந்தத்தில்" கையெழுத்திட்டனர். இது சிங்கள இனவாத குழுக்களுடன் இணைந்து தமிழர் விரோத அமைப்புகளால் தயாரிக்கப்பட்டது் இந்த ஒப்பந்தம் நல்லிணக்கத்தில் கவனம் செலுத்துவதாக கூறி, தமிழர்களுக்கு எதிரான சிங்கள ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையை ஊக்குவிக்க உதவும் ஒப்பந்தமாகும்.

அமைதிக்கான வட கரோலினியன் (NCFP) என்ற தமிழ் அமைப்பின் ஊடாக திரு, திருமதி. எலியாஸ் ஜெயராஜா அவர்கள் மே 18 நிகழ்வை நடத்த திட்டமிட்டுள்ளதாக புலம்பெயர் தமிழ் தொடர்புகள் எமக்கு தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பல தமிழ் நபர்கள், "இமாலய ஒப்பந்தம்" பற்றி அறிந்திருக்க மாட்டார்கள் எனவும் பலர் எமக்கு கூறியிருந்தனர். இந்த தமிழ் உறவுகளை திரு. ஜெயராஜா அழைத்து தானும் இறந்த தமிழருக்காக கண்ணீர் காட்டுவதற்காக முள்ளிவாய்க்கால் தினத்தை எம் தொப்பில் கொடி உறவுகளுடன் நினைவு கூற முயல்கிறார்.

தமிழ் தாய் மார்களாகிய நாம், வன்னியிலிருந்து அமைதிக்கான வட கரோலினியர்களை (NCFP) திரு. திருமதி. ஜெயராஜாகளை, முள்ளியவாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் பங்கு பெற அனுமதி கொடுக்க வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

"தமிழ் இமாலய துரோகிகள்" என்று குறிப்பிடப்படும் நபர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் செய்யது "இமாலய உடன்படிக்கைக்கு" ஆதரவைப் பெறுவதையும், வெளிநாட்டு அரசாங்கங்களுடன் பணம் பெறும் உத்திகளில் ஈடுபடுவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்.

வெளிநாட்டு அரசாங்கங்களிலிருந்து கணிசமான அளவு பணம் "இமாலயா ஒப்பந்தம்" என்று அழைக்கப்படும் குழுவுடன் இணைக்கப்பட்ட தனிநபர்களின் கணக்குகளுக்கு அனுப்பப்படுகிறது என்று ஒரு நிலையான அவதானிப்பு உள்ளது. இந்த நிதிகள் "இமாலய ஒப்பந்தத்தை" ஊக்குவிக்கும் முயற்சிகளை ஆதரிப்பதாக கூறப்படுகிறது.

எனவே, தமிழர்களை கொன்று குவித்த ராஜபக்சக்களை ஆதரிதக்கும் இத்தீவிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழர்கள், இப்போது இனப்படு கொலைக்கான நீதிக்கும் தமிழ் அரசியல் இறையாண்மைக்கும் இடையூறு விளைவிக்கின்றனர். இவர்களும் இவர்களின் அமைப்புகளுக்கும் முள்ளியவாய்க்கால் நினைவு நாளை நினைவேந்த எந்த தார்மீக அதிகாரமும் இல்லை.

"இமாலய துரோகிகள்" என்று நாம் குறிப்பிடுபவர்களை ஒதுக்கி வைத்து மே 18 நினைவு தினத்தை நடத்தத் திட்டமிடமாறு தமிழ் அமைப்புகளை நாங்கள் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

நன்றி.

## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் கூடும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,J




**தனுசு:** வருமானம் அதிகரிக்கும் வாரம். எதிரிகள் உதிரியாகும் காலம். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்மச்சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் சகாயம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றங்கள் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள். அரசுதுறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் போக்கும். வெற்றி எட்டும் காலம். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும் சிந்தனையில் முதிர்ச்சியும் பெருகக்கூடிய காலம். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். உற்சாகம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். பேச்சில் துணிவு தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். நிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. பிரார்த்தனையால் பலன் உண்டு. புதிய வேலை வாய்ப்பு கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,4
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,M




**மகரம்:** வீண் விரயங்கள் குறையும் வாரம். போட்டி, பொறாமைகள் விலகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு பெருகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். வெளியூர் பயணம் வெற்றி தரும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத் தொழில் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. புண்ணியம் சேரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். பிரச்சனைகள் அகலும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 5,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**கும்பம்:** வெற்றிச் செய்தியை தொட்டு ரசிக்கும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். வாகனத்தால் செலவு ஏற்படும். தாய்வழி தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன் சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். கடுமையான காலம். செயல்களில் கவனம் தேவை. பேச்சில் நிதானம் தேவை. மருத்துவச் செலவுக் குறையும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைகளில் ஆர்வம் கூடும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதம் ஆகும். விரக்திகள் மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் உருவாகும். விரயங்கள் கூடும். தேக ஆரோக்கியம் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். தாராளமான தனவரவு உண்டு. கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். நட்பு வட்டம் விரிவடையும். காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்காலச் சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். வீண் வம்புகள் அகலும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. பிள்ளைகளின் கல்வியால் பெருமை சேரும். வெற்றியும், வெகுமதியும் கூடும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,1.4,3
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P




**மீனம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வாயில் தேடி வாய்ப்பு வரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். ஆபரண தொழில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். தொழில் வளம் கூடும். வரவுகள் அதிகரிக்கும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெற்றோர்களின் பாராட்டு கிடைக்கும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். வளமான சிந்தனை உருவாகும். அலைச்சல் ஆதாயம் தரும். திட்டம் வெற்றி பெறும். பணத்தேவை அதிகரிக்கும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். கவனமுடன் செயல்பட வேண்டும். பெண்களுக்கு பெருமை சேரும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். திண்டாட்டங்கள் மறையும். கொண்டாட்டங்கள் கூடும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பெண்களுக்கு யோகம் கூடும். பெருமைமிக்க காலமாகும். வறுமையின் வாட்டம் குறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,7,5
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்: **26-08-1971**

ஆண்டவன் அடியில்: **11-04-2024**



## திருமதி. பெனடிக் செறின் தர்சினி

**இலங்கை - கொழும்பு வத்தளையை பிறப்பிடமாகவும், கனடா - மொன்றியலை (Montreal) வசிப்பிடமாகவும் கொண்ட பெனடிக் செறின் தர்சினி அவர்கள் கடந்த 11-04-2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்ககஸ் நல்லரட்ணம் பெனடிக் - ராஜேஸ்வரி பெனடிக் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி இராசையா - செல்லமுத்து (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகளும்,
தேசிங்கராசா (ரவீ) அவர்களின் பாசமிகு மனைவியும்,
சரன், மித்திரா, டில்சான், கிஷான் ஆகியோரின் பாசமிகு தாயும்,
கிஸ்டின், வேஜினி, காலஞ்சென்ற டிரோன் ஆகியோரின் அன்பு சகோதரியும்,
காலஞ்சென்ற கனகபாலன், மற்றும் சண்முகபாலன் ஆகியோரின் மைத்துனியும்,
நடேஸ்வரன் (றஞ்சன்), யோகரஞ்சினி (றஞ்சி - ஜேர்மனி) ஆகியோரின் அண்ணியும்,
மதிவதனி (இலங்கை), பிரவின் (இலங்கை), சுதன் (கனடா), சுரேன் (கனடா), பிரதா - பிரவின் - பிரிந்தா (லண்டன்) ஆகியோரின் சின்னம்மாவும்,
கஜித்தன் (கனடா), அக்ஷிதா (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும்,
பவிஷாவின் (ஜேர்மனி) மாமியாரும்,
தேவராணி (லண்டன்), சியாமிளா (கனடா) ஆகியோரின் சகலியும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 10-05-2024 வெள்ளிக்கிழமை அன்று 4239 Bd des Sources, Dollard-des-Ormeaux, QC H9B 2A6 இல் அமைந்துள்ள Rideau Funeral Home இல் மாலை 5:00 மணி தொடக்கம் இரவு 9:00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 17-05-2024 வெள்ளிக்கிழமை காலை 10:00 மணி தொடக்கம் பார்வைக்கு கிரியைகள் நடைபெற்று 12:00 மணியளவில் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு: ரவி (கணவர்): (514) 679-4707
வேஜினி (சகோதரி): (437) 328-7545
றஞ்சன் (மைத்துனர்): 438) 401-9671




# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




### RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

## Contact Us Today

# NESAN
*Subramaniam*
## 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

உதயம் 1466 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 10, 2024

## அரசியல் நேர்மை மிக்கவரான ஈழவேந்தன் அவர்களின் அனுபவத்தையும் அறிவையும் எமது அடுத்த தலைமுறைக்கு கடத்த நாம் தவறிவிட்டோம்"

### இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி கவலை தெரிவிப்பு





எங்கள் மத்தியில் வாழ்ந்த அல்லது வாழ்ந்து மடிந்த தமிழ் அரசியல்வாதிகளில் அரசியல் நேர்மை மிக்கவராகவும் மூளை முழுவதும் தமிழ் மக்கள் தொடர்பானதும் தமிழ் மொழி தொடர்பானதுமான தகவல்களை நிறைத்து வைத்திருந்த அமரர் ஈழவேந்தன் அவர்களின் அனுபவத்தையும் அறிவை-யும் எமது அடுத்த தலைமுறைக்கு கடத்த நாம் தவறிவிட்டோம்."

இவ்வாறு கடந்த 4ம் திகதி கனடாவில் நடைபெற்ற அவரது இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி கவலைடன் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



## சட்டத்தரணியாக சத்திய பிரமாணம் செய்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் புதல்வி பிரவீனா

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியும் கொழும்பில் அரச பயங்கரசவாதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டவருமான மாமனிதர் நடராஜா ரவி-ராஜ் அவர்களின் புதல்வி பிரவீனா ரவிராஜ் கடந்த 03-05-2024 அன்று கொழும்பு உச்சநீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்திய பிரமாணம் செய்து கொண்டார். கொழும்பு பிசப் பெண்கள் கல்லூரியில் **(Bishop's College)** கல்விபயின்ற அவர் உயர் கல்வித்துறையாக சட்டத்த்துறையை தேர்ந்தெடுத்திருந்தார்.

கல்லூரியின் டெனிஸ் அணியில் இடம்பெற்றிருந்த அவர் சிறந்த டெனிஸ் வீராங்கனையாகவும் செயற்றிறன் மிக்க மாணவத் தலைவியாகவும் தன்னை அடையாளப்படுத்தியிருந்தார். இவர் மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதனி-ன் துணைவியாவார்.

மாமனிதர் நடராஜா ரவிராஜ் யாழ் மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராவார். மும்மொழிகளிலும் ஆளுமை உள்ள அவர், சிங்கள மக்களுக்கும் உலகுக்கும் தமிழ் மக்களின் பிரச்சனைகளை உரக்க சொன்னவர். தமிழ்த் தேசியத்தின் பால் உயர்ந்த பற்று உறுதி கொண்ட அவர் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலத்தில் தனது சட்டப் புலமையை தமிழ் தேசியத்திற்காகவும் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காகவும், அர்ப்பணிப்போடு பயன்படுத்தியிருந்தார். அவர் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் தேதி அரசு படைகளால் தலைநகரில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருந்தார். தமிழ் மக்கள் மீது அவர் கொண்டிருந்த ஆழமான அன்பையும், தனநலமற்ற உறுதியான செயற்பாடுகளையும் கௌரவிக்கும் வகையில் அவருக்கு தேசிய தலைவர், மாமனிதர் என்ற உயரிய கௌரவத்தை வழங்கியிருந்தார்.

தந்தையைப் போலவே பிரவீனா ரவிராஜும் மும்மொழிகளிலும் ஆளுமை மிக்க ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## உதவும் பொற் கரங்களின் தலைவர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை ஒரே ஒரே மேடையில் இரண்டு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்



கனடா நாட்டிலே அதிவேக வளர்ச்சியில் முன்னணியில் திகழும் பிரம்ரன் மாநகரத்தின் ஐம்பதாவது பிறந்தநாளையொட்டி நகரத்தின் சிறந்த சாதனையாளர்களையும் மற்றும் தொண்டர் சேவையில் அளப்பெரிய பங்காற்றிய சிறந்த பிரஜைகளையும் அடையாளம் கண்டு சிறப்பு விருது வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் மே மாதம் ஒன்பதாம் திகதி அன்று பிரம்ரன் மாநகரத்தின் மையத்தில் அமைந்துள்ள ரோஸ் தியேட்டரில் ஆயிரக்கணக்கான விருந்தினர்கள், பார்வையாளர்கள் மத்தியில் இடம்பெற்ற நிகழ்வில் நமது கிழக்கின் மைந்தனும், உதவும் பொற் கரங்களின் தலைவரும் சமூக சேவையாளருமாகிய விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ஒரே மேடையில் அதி உயர்ந்த விருதுகளான "பிரம்ரன் ஐப்பதாவது பிறந்தநாள் சிறந்த குடியுரிமைக்கான விருது" மற்றும் முப்பத்தைந்து வருட நீண்டகால சேவைக்கான தொண்டர் விருது ஆகிய இரண்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை கனடாவில் மட்டுமன்றி உலகலா-வி-யரீதியில் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

இலங்கேஸ் தருமலிங்கம் அவர்களின் பரிந்துரையின் பிரகாரம் இவ் உயரிய இரு விருதுகள் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களுக்கு கிடைத்தமை மிகப்பெரிய சாதனையாகும்.

## "அரசியல்வாதிகள் எமது மண்ணை காப்பாற்றவாவது பாராளுமன்றத்தில் வாய் திறந்து பேச வேண்டும்"



அரசியல்வாதிகள் மண்ணுக்காக வாய் திறவுங்கள் - முல்லை சிங்கள பூமியாக மாறுகிறது. தமிழ் அரசியல்வாதிகள் எமது மண்ணை காப்பாற்றவாவது பாராளுமன்றத்தில் வாய் திறந்து பேச வேண்டும் என முல்லைத்தீவு தீவு மாதர் சங்க தலைவி சு. கங்கம்மா வேண்டுகோள் விடுத்தார். 08-05-2024 புதன்கிழமை வட மாகாண ஆளுநர் செயலாளருக்கு முன்னால் இடம் பெற்ற போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (தொடர்ச்சி 4ம் பக்கம்)

## கனடிய பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற "தமிழினப் படுகொலை நினைவு தினம்" அனுஸ்டிப்பு



07-05-2024 அன்று கனடிய பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற "தமிழினப் படுகொ-லை நினைவு தினம்" அனுஸ்டிப்பு வைபவத்தில் கலந்து கொண்ட கனடிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் **Melanie Joly** எமது அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் உதயன் லோகேந்திரலிங்கம் மற்றும் "தேசம்" மாத இதழின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ராம்சங்கர் சிவநாதன் ஆகியோர் ஒன்றாக எடுத்துக் கொண்ட புகைப்படம்.

